


80

# வைகுந்தவாசன்

முத்துவிழா மலர் 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HISTORIC SPEECH AT U.N

## Text of speech made by Krishna Vaikunthavasan

**United Nations General Assembly**
**on 5th October, 1978**
**(The President of the Assembly Mr. I Liveano, presided)**

Mr President! Leaders of the World!

If oppressed minority nations such as Tamil Eelam cannot make representations to this supreme body, then where are we to go?

My name is Krishna and I come from the 2.5 million strong Nation of Tamil Eelam lying between Sri Lanka and India.

The Sri Lanka Sinhala government is continuing a policy of genocide aimed at the destruction of our Tamil Nation.

We have exercised our right of self-determination to live as a separate Nation.

There is every danger of the Tamil problem threatening the peace of the Indian Region.

The problem in Sri Lanka will develop to be as serious as the Palestinian and the Cyprus problems unless you, the world leaders intervene and help in its solution now.

We appeal to you for such help! Thank you. I apologise for speaking without permission.

**LONG LIVE TAMIL EELAM!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியார் கிருஷ்ணா வைகுந்தவாசன் முத்துவிழா மலர்

## 29 - 04 -2000



தமது குடும்பத்தினருடன் பெரியார் வைகுந்தவாசன்

**மலர் வெளியீட்டுக் குழு**


பொன்.பாலசுந்தரம்
மலர் ஆசிரியர்
214 Demesne Road
Wallington
Surrey SM6 8EN. UK
Telephone: 020 8395 8013

ஐ.தி.சம்பந்தன்
செயலாளர்
15 Rutland Road
Forest Gate
London E7 8PQ. UK
Telphone: 020 8592 6992

ஏ.வைரவமூர்த்தி

கவிஞர் செ. நாகேந்திரன்



சிவயோகம் கலை அரங்கம், அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் கோவில்
180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ, UK





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே..... உள்ளங்கள்


- சமர்ப்பணம் 3
- Son Gandeepan's Greetings 4
- Greetings from S.Sivanayagam 5
- நினைவுதரும் நிகழ்ச்சிகள் 6
- திரு. வைகுந்தவாசன் ஆக்கங்கள் 7
- 80க்கு 80 பாமாலை – கவிஞர் செ. நாகேந்திரன் 8
- முத்துவிழாக்காணும் மூத்த தமிழ் தலைவர் – பழ நெடுமாறன் 9
- வையகம் போற்ற வரலாறு சமைத்தவர் – விமல் சொக்கநாதன் 10
- ஈழத் தமிழர் விடுதலை வேட்கையை – மா. க. ஈழவேந்தன் 11
- நினைத்ததை முடிப்பவர் – ஆர். ராஜகோபால் 14
- An Articulate Leader - A . Vairavamoorthy 16
- தமிழீழம் என்பதே கனவும் நினைவும் – திரு எஸ். திருச்செல்வம் 17
- மக்கள் குரலோனுக்கு முத்துவிழா – கோபாலபிள்ளை மகாதேவா 18
- Krishna Vaikunthavasan - Eric Crowther OBE 19
- வரலாற்றில் வைகுந்தவாசன் – மாலி 20
- வைகுந்தர் பெயர் என்றும் வாழும் – பா. வை. ஜெயபாலன் 21
- அமெரிக்க ஆயுட்கால தண்டனை – கோல்ட் யங் ( Gold Young ) 22
- வைகுந்தவாசனின் துணிகரச் செயல் – ஐ. தி. சம்பந்தன் 24
- சோர்விலான் அஞ்சான் – ஆறு திருமுருகன் 25
- நான் படித்த வரலாறு – ந. சி. ஜோர்ஜ் 26
- வைகுந்தவாசனை வாழ்த்துவோமே – பொன் சிவசுப்பிரமணியம் 27
- ஐ. நா. சபைக்குள் எறிகணை – சு. மகாலிங்கம் 28
- தமிழர் நல்வாழ்வுக்காக – மு ஆறுமுகம் 29
- செயல் வீரர் – க. செல்வநாயகம் 30
- ஐ. நா, பேச்சு அரிய சாதனை – அரங்க முருகையன் 31
- படங்கள் 32
- சாதனைகள் இரண்டு சாதித்தவர் ஒருவர் – பாலா 34
- தென் லண்டன் தமிழர் – எஸ். ஸ்ரனிஸ்லாஸ் 35
- பேச்சிலும் ஈழத்தமிழர் மூச்சிலும் ஈழத்தமிழர் – எ. குலவீரசிங்கம் 36
- வாழிய வைகுந்தவாசா வாழியவே – வேலணையூர் சிவா 37
- உலகத் தமிழர் – செ. குணரத்தினம் 38
- ஈழத்தமிழருக்கு ஆற்றிய சேவை – சிறீகந்தராஜா 39
- வாழிய நீர் இன்னும் பல்லாண்டு – வீ. நாகரத்தினம் 39
- அறங்காவலர் – எஸ். சீவரத்தினம் 40
- குடும்ப நண்பர் – கனகரட்னம் 41
- சுடரொளிக் கழகம் – திருமதி செல்வதி சம்பந்தன் 41
- அன்புடையவர், பண்புடையவர் – ந. சச்சிதானந்தம் 42
- வாழிய வைகுந்தவாசன் – உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன் 43
- இளைஞர் பின்பற்றட்டும் – க. ஜெகநாதன் 44
- துணிவே துணையானவர் – ஸி.சிறீபதி 44
- பெரியார் பெருமை – கே.பாஸ்கரன் 44
- வைகுந்த மண்டபம் – பொன் பாலசுந்தரம் 45
- கவிதை – பொள்ளாச்சி மணிமொழி 47
- Marco Polo's Visit - Sachi M. Srikantha 48
- போராட்டென்பதுன் குருதியில் உறைவது – செ. சிறிக்கந்தராசா 51
- நன்றி 52




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

**வணக்கம்**

வையகம்போற்ற ஈழம் முழங்கிய பெரியார் கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களின் சேவை நலன் கௌரவிப்பு மலரை உங்கள் கரங்களில் மலரவைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

சமூக, தொழிற்சங்க, அரசியற் துறைகளில் அளப்பரிய சேவைகளைச்செய்த – செய்துகொண்டிருக்கும் பெரியார் வைகுந்தவாசன் அவர்களுக்கு இம்மலர்க் கௌரவம் ஒன்றுமட்டும் நிறைவான ஒன்றல்ல.

"கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே" என்கிறது வேதம். அந்த தத்துவத்துக்கமைய தமது வாழ்க்கையை வகுத்துக்கொண்ட இவருக்கு இம்மலர் திருப்திதரும் என்பது எமது நம்பிக்கை.

துணிவும், தன்னம்பிக்கையும் சாதனைகளுக்கு வழிகாட்டிகள் என்பார்கள். இவரது வாழ்க்கை இதற்கு ஒரு உதாரணம். துணிவுதான் ஐக்கிய நாடுகள் சபைக்குள் பிரவேசிக்கவைத்தது. ஈழமக்களின் பிரச்சனைகளை ஒருசில நிமிடநேரத்தில் உலகறியவும் வைத்தது.

வாழ்க்கையில் 50 வருடங்களுக்கு மேலான தொழிற்சங்க – அரசியல் – பொதுச்சேவை ஒரு இமயச்சாதனை. எல்லாத்துறைகளிலும் புறமுதுகு காட்டாமல் போராட்டம் நடத்திய பெருமைக்குரிய மாமனிதர் இவர்.

தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்துள்ள பெரியார் வைகுந்தவாசன் அவர்களுக்கு இம்மலரை தமிழ் மக்கள் சார்பில் சமர்ப்பித்து கௌரவப்படுத்துவதில் பெருமைப்படுகிறோம்.

சிவனுக்கு சக்திபோல பெரியார் வைகுந்தவாசனுக்கு எல்லாநேரங்களிலும் பக்கபலமாக இருந்து சேவைசெய்துவரும் திருமதி. மகேஸ்வரி வைகுந்தவாசனுக்கும் எமது வாழ்த்துக்கள்.

இம்மலரின் அட்டைப் படத்தை அமைத்தவர் விழாக்காணும் பெரியார் வைகுந்தவாசன் தம்பதியினரின் ஏக புதல்வன் காந்தீபன். லண்டனில் ஒரு சிறந்த சித்திரக் கலைஞர். பக்கிங்காம் அரண்மனையின் பரிசும், பாராட்டும் பெற்றவர். இவரின் இந்தப் படைப்பு தந்தைக்கு மகனாற்றும் உதவியாக அமைந்துவிட்டது. காந்திக்கு நன்றி.

இந்த முத்துவிழா மலரின் சிற்பி, நண்பர் ஐ. தி. சம்பந்தன். பெரியார் வைகுந்தவாசனுடன் நீண்டகாலத் தொடர்புடையவர். தஞ்சைப் பெரியாழ்வார் கோவிலில் பொங்கல் தினத்தன்று ஈழப்பிரகடனம் செயப்பட்டபோது கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர். சேவையை நன்கறிந்தவர். அதனால் மலர்க் கௌரவம் முக்கியம் என்று அதற்காக இரவு பகலைப் பார்க்காமல் உழைத்தவர். இவருக்கு மலர் வெளியீட்டுக் குழுவினர் தமது பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்கிறார்கள்.

பாமாலையுடன் நின்றுவிடாது மலருக்கான எல்லா ஏற்பாடுகளிலும் மனமுவந்து உதவிக்கரம் நீட்டிய கவிஞர் நாகேந்திரனுக்கு நன்றி.

அறிஞர்களும், அன்பர்களும், நண்பர்களும், ஆதரவாளர்களும் பெரியார் வைகுந்தவாசன் சேவைகள்பற்றி தமது கருத்துக்களை வழங்கியுள்ளனர். வாழ்த்துச்செய்திகளை அனுப்பியும் கௌரவித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் எமது நன்றி.

தமிழ் மக்களின் அபிலாசைகள் எல்லாம் நிறைவேற தொடர்ந்து பல சேவைகளைச் செய்வதற்கு பெரியார் வைகுந்தவாசன் அவர்களுக்கு நிறைந்த ஆயுள் – ஆரோக்கியத்தை எல்லாம்வல்ல இறைவன் கொடுத்தருள வேண்டுகிறோம்.

மலர் வெளியீட்டுக் குழு சார்பில்

ஆசிரியர்

*Son Gandeepan's Greetings*

Dear Appa

A tribute on your 80th Birthday to everything you have achieved and to express my gratitude for having groomed and encouraged me in every aspect of my life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greetings from Hot Spring Siva



சென்னையில் சந்திப்பு

**A** strange thing happened in New York City on the 5th of October 1978. Representatives of the many countries of the world sitting in the auditorium of the General Assembly of the United Nations, heard with disbelief the name of a country they had never heard before, and saw a man at the podium whom they had never seen before. By the time they blinked their eyes several times and wiped their glasses, a man who said he was Krishna Vaikunthavasan had already introduced his country - Thamil Ealam - to the world. Mr.Vaikunthavasan Is always a man in a hurry. He never waits for the baby to be delivered. He announces the impending birth as soon as the conception takes place!

But then, Mr.Vaikunthavasan is a man of many parts and many talents. He knows how to agitate as a Trade Unionist one day and then run a People's Voice newspaper, he also knows how to sit as a sober judge on the Bench of a foreign country, and also how to grab the ears of world politicians into listening to the problems of the Tamils. He also knows to contest elections unsuccessfully whether from Kankesanturai or from Collier's Wood!

On this happy occasion when his 80th birthday is being celebrated, it gives me immense satisfaction in adding my own warm greetings to him. They say that when the mind makes appointments that the body cannot keep, that is a definition of old age. I am sure Mr.Vaikunthavasan's mind keeps making appointments all the time, which his body cannot keep. But let us all pray that there is one important appointment that his body must be asked to keep, and that is to ensure that he lives to see the day when Tamil Eelam is sworn in as a member country of the United Nations ■

S.Sivanayagam

*Editor* **Hot Spring**

P.O.Box 14258, London SW16 6EN. UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுதரும் நிகழ்ச்சிகள்

**1937** யாழ் கல்லூரியில் அறிஞர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் மாணவன்

**1944** சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற அகில இந்திய தமிழ் காங்கிரஸ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்கலந்து கொண்டு அகில இலங்கை சிறுபான்மை மக்கள் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை அமைக்க கோரியது.

**1947** அரசாங்க ஊழியர் பொதுவேலை நிறுத்த போராட்டம்.

**1949** அரசாங்க ஊழியர்களின் றெட்ரேப் பத்திரிகை ஆசிரியர்.

**1949** அரசாங்க குமாஸ்தாக்கள் சங்க செயலாளராக தெரிவு செய்யப்பட்டது.

**1950** அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுதல்.

**1951** மக்கள் குரல் என்ற பெயரில் ஆங்கில வாரப்பத்திரிகை நடத்தியது.


**1952** மக்கள் குரல் ஆசிரியர் வைகுந்தவாசன் அரசாங்க உத்தரவால் கைதானது - வழக்கு விசாரணைக்கு வராமையால் கைதுசெய்ய வாரன்ட் பிறப்பிக்கப்படல்.

**1952** சீன, சோவியத் யூனியன் சுற்றுப்பயணம்.

**1953** சோவியத் யூனியன் விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியபோது விமான நிலையத்தில் கைது.

**1955** லண்டனுக்கு வந்து பாரிஸ்டராகத் தேர்வு பெறுதல்.

**1956** மீன்பிடி இலாகாவில் வேலை பார்த்தது.



**1965** திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை எதிர்த்து இடது சாரிக்கட்சி அபேட்சகராக காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிடல்

**1971** ஸாம்பியாவில் நீதிபதி பதவியேற்றல்

**1975** பதவியில் நீடிப்பு.

**1977** லண்டனில் குடியேறுதல்.

**1978** அக்டோபர் 5ம் திகதி ஐக்கியநாடுகள் சபைக்கூட்டத்தில் திடீரெனப் பிரவேசித்து ஈழத்தமிழர்களைப் பற்றிப் பேசியது.

**1978** இந்திய - இலங்கை சம்மேளனம் ஸ்தாபிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1979** திருமதி இந்திரா காந்தியுடன் ஈழத்தமிழர்கள் பற்றி பேச்சு.

**1979** பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு.

**1980** ஜனவரியில் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சந்தித்து ஈழத்தமிழர்களுக்கு உதவ கோரிக்கை. வெளிநாட்டமைச்சர் நரசிம்மராவ், சஞ்ஜே காந்தி, ஆர். வெங்கட்ராமன் போன்ற தலைவர்களைச் சந்தித்து ஈழத்தமிழர் பிரச்னை பற்றி விளக்கியது.

**1980** பிரதமராக இருந்த இந்திரா காந்தியை புது டில்லியில் சந்தித்து ஈழத்தமிழர் பிரச்னையைப் பற்றி பேசியது.

**1980** அமரர் சி.என். அண்ணாத்துரை சமாதியில் மலர் அஞ்சலி.

**1981** தமிழர் ஒருங்கிணைப்புக் கமிட்டியின் செயலாளராக இருந்து இலங்கைக்கு படைகளை அனுப்புமாறு ஐ.நா.வைக் கேட்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

**1982** தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் திரு. நெடுமாறன் வீட்டில் சந்திப்பு.

**1982** தமிழ் ஈழம் கோரும் பிரகடனம் தஞ்சை பெரியாழ்வார் ஆலயத்தில் பொங்கல் திருநாளன்று நிறைவேற்றப்பட்டது.

**1982** நியூயார்க்கில் தமிழ் ஈழ மகாநாட்டில் உரை.

**1982** தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டும், காவலில் வைக்கப்பட்டும் நாடு கடத்தப்படல். முதல் தடவையாக ஈழத்தமிழர் ஒருவர் இந்திய மண்ணிலிருந்து நாடு கடத்தப்படுதல்.

**1983** பரிசுத்த பாப்பரசரை சந்தித்தது.

**1986** டென்மார்க்கில் நடைபெற்ற உலக சாமாதான மகாநாட்டில் கலந்துரையாடல்.

**1990** தமிழ்நாடு அரச சபாநாயகர் திரு. தமிழ்க்குடிமகன் தலைமையில் தமது புத்தகத்தை (ஐ நாவில் ஈழத்தின் குரல்) வெளியிட்டது.

**1997** பிரித்தானிய பாரளுமன்ற பொதுத் தேர்தலில் சுயேச்சை அபேட்சகராக போட்டியிட்டது

## திரு. வைகுந்தவாசன் ஆக்கங்கள்

1 ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ்
2 தமிழ் ஈழ மக்களும் ஐக்கிய நாடுகள் சபையும்
3 ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் ஈழக்குரல்
4 இந்திய – தமிழ் ஈழ சம்மேளனம்
5 ஐ. நாவில் தமிழன் – என் முதல் முழக்கம்
6 மக்கள் குரல் – ஆங்கில வாரப் பத்திரிகையில் வெளிவந்த தலையங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80க்கு 80 பாமாலை

மேள இசைத்துறையில் உலகப்புகழ் பெற்ற
ஈழத் திருமண்ணாம் அளவெட்டித் திருநகரில்
ஆழ வந்தோர்க்கு அபாயமணியடிக்க வந்த
தோழனாம் கிருஷ்ணா வைகுந்த வாசனே வாழி

திசையெட்டுந்தமிழைத் துலக்கிடுங் காரைநகர்
இசைமேதை மகேஸ்வரியைக் கைப்பிடித்து
அசைவற்ற தமிழீழக் கொள்கையுடனினத்தை
மிகைப்பட நேசிக்கும் மேன்மையனே வாழி

எளிமை லிகிதராய் இதழாசிரியராய் ஈடற்ற
தொழிற்சங்க வாதியாய் அரசியற் தீர்க்கனாய்
விழிப்புடை நியாயவாதியாய் நீதிபதியாய் வந்து
அழியாத் தமிழ் காக்கும் அன்பனே வாழி

பையவே பல தமிழ் குழுக்கள் உருவாக்கி
மைய அரங்குகளில் தமிழரை மிகையாக்கி
நையப்பட்டால் நெஞ்சையுங் கொடுத்து
வையப் புகழ் பெற்ற வாசனே வாழி

மக்கள் குரல் பத்திரிகை நடத்தி
தக்க நேரங்களில் ஈழத்து அரசுகளைத்
திக்குமுக்காட்டும் உண்மைகளை எழுதிய
உக்கிர உத்தம விமர்சகரே வாழி

துணிவே துணையாய்த் தமிழே உயிராய்த்
தணியாத் தாகமுடன் தமிழின விடுதலைக்காய்
அணியணியாய்ப் பல போராட்டம் நடத்திப்
பணியே பெரிதென்ற பெருமையனே வாழி

அரசாங்க ஊழியரின் உரிமைக்காய்
உரமான போராட்டம் பற்பல நடத்தித்
தரமான உரிமைகளைத் தைரியத்தாற்பெற்ற எம்
வரமான வைர நெஞ்சமே வாழி

சூதான செயல்புரியும் அரசுகளை உறுத்தி
ஆதாரங்காட்டி அனைத்தையும் விளக்கி
வாதாடி வெல்வதே குறியாய்க் கொண்டு
சாதாரண வாழ்வேற்ற செம்மலே வாழி

ஓயாத அலை கடலாய் அயராது உழைத்து
வாயா இடமெங்கும் வாதிட்டு வென்று
சாயாக் கொள்கையுடன் சுடர்விட்டுத்
தேயாப் புகழ் பெற்ற திருமகனே வாழி

கட்டங்கட்டமாய் வாழ்வில் முன்னேறிச்
சட்டத்தரணிக்கும் படித்துப் பட்டம் பெற்று
திட்ட மனைத்திலுந் தரணிப் புகழ் தேடி எதிலும்
முட்டியே மோதிய இலட்சியனே வாழி

சம்பியா நாட்டுயர் நீதிபதிப் பதவி பெற்று
சிம்மக்குரலோடு செந்தமிழும் பேசியென்றும்
எம்மினிய இனத்துக்கு ஏராளம் புரிந்து
நம்பிக்கை தளராவுயர் நேசனே வாழி

புதிராக அரசிட்ட வழக்குகள் அனைத்திலும்
எதிராக வாதிட்டு முழுவதும் தோற்கடித்து
உதிரத்தைக் கொடுத்து உரிமைக்காயுழைத்த
அதி மிகு துணிவுவடைத் தமிழனே வாழி

சில சில பேரின் சலசலப்புக்கு அஞ்சாது
பல பல மாநாட்டு மேடைகளில் பங்கேற்று
உலகத் தலைமைகளின் நன்மதிப்பைப் பெற்ற
பல மிகு வாதியாய்த் திகழ்ந்தவா வாழி

உத்தரவற்று யாரும் உட்புகவே முடியாமல்
பொத்திவைத்திருந்த ஐ நா சபைக்குள்ளே
சத்தமின்றி புகுந்து சரியான மேடையேறி
சத்தமுடன் தமிழீழத்தை முழக்கிய சூரனே வாழி

மீள முடியாச் சாகரத்தில் தத்தளித்து
ஈழத்தமிழர் ஏற்றிடுங் கொடுமைகளை யன்று
சூழலுக் கேற்ப ஐநாவில் எடுத்துரைத்த
ஆழப் பேரூற்றே அண்ணலே வாழி

எந்நாளுந் தமிழுலகம் மறக்கா அளவுக்கு
அந்நாளில் ஐநாவில் சாதனையைப் புரிந்து
தன்னாலியன்றதைத் தமிழுக்கும் தமிழர்க்கும்
பொன்னேட்டிற் பதித்த கண்ணியனே வாழி

சாதிமதபேதமற்ற சமத்துவத்தை விரும்பி
நீதிவழி மனித நேயத்தை வலியுறுத்தி
நாதியற்றோர் நலன்களை நிலைநிறுத்தப்
போதியன செய்த பெருந்தகையே வாழி

அக்கால முதலாய் அணிகளை ஆராய்ந்து
இக்கால வரை இனத்துக்காய் உயிர் கொடுக்கும்
தக்க பெரு அணியின் தேசியத்தலைவனுக்கே
பக்க பல மாயுள்ள பெருமகனே வாழி

மண்பற்று மாறாத மாந்தரில் தீரனாய்
எண்ணற்ற கோடி இதயத்தில் திலகமாய்
எண்பது நிறைந்தும் உள்ளத்தில் மழலையாய்
பண்புடன் வாழும் பிரியனே வாழி

இல்லச் சீருடன் இணையற்ற சுகத்துடன்
தொல்லை பிணியற்று இனம் பெருக வாழி
செல்வு மிடமெங்கும் சிறப்புக்கள் பெருக
பல்லாண்டு பல்லாண்டு வாழி வாழி ■



செ. நாகேந்திரன் – இலண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1984ஆம் ஆண்டில் அவர் தமிழகத்திற்கு வந்திருந்தபோது சட்டமன்ற விடுதியில் எனது அறையில் தங்கியிருந்தார். நான் மதுரைக்குச் சென்றிருந்த வேளையில் காவல்துறையினர் அவரைக் கைதுசெய்து உடனடியாக விமான நிலையத்துக்குக் கொண்டு சென்று பிரிட்டனுக்கு அனுப்பிவிட்டார்கள் என்று கூறுகிறார் தமிழீழ விடுதலைக்காக இந்திய மண்ணிலிருந்து இடைவிடாது போராடிக்கொண்டிருக்கும் உலகத் தமிழர் தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள்.

# முத்துவிழா காணும் மூத்த தமிழ்த்தலைவர்

பழ. நெடுமாறன்

மூத்த தமிழினத் தலைவர் திரு. வைகுந்தவாசன் அவர்களின் முத்துவிழா நடைபெற இருப்பதை அறிய மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தொழிற்சங்க மற்றும் அரசியல் பணிகளில் ஈடுபட்டு தமிழ் மக்களுக்கு ஓயாத தொண்டாற்றியவர் அவர். அந்த தொண்டிற்கெல்லாம் சிகரமாக ஐ. நா. பேரவையில் தமிழீழ முழக்கத்தைச் செய்த அவரின் நெஞ்சுரத்தினையும், வீரத்தையும், துணிவையும் பாராட்டாத தமிழர்கள் இல்லை.

1984ம் ஆண்டில் அவர் தமிழகத்திற்கு வந்திருந்தபோது சட்டமன்ற விடுதியில் எனது அறையில் தங்கியிருந்தார். நான் மதுரைக்குச் சென்றிருந்த வேளையில் காவல்துறையினர் அவரைக் கைதுசெய்து உடனடியாக விமான நிலையத்துக்குக் கொண்டுசென்று பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பிவிட்டார்கள். செய்தி தெரிந்து நான் மதுரையிலிருந்து வருவதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. ஆனாலும் அதற்காக அவர் கொஞ்சமும் கலங்கவில்லை. தனது தொண்டினை நிறுத்திவிடவும் இல்லை.

இந்தியப் பிரதமராக இருந்த திருமதி. இந்திராகாந்தி, தமிழக முதலமைச்சராக இருந்த எம் ஜி. ஆர், அப்போது எதிர்க்கட்சித் தலைவராகவும் தற்போதைய முதலமைச்சராகவும் உள்ள கலைஞர் மு.கருணாநிதி மற்றும் இந்திய - தமிழக தலைவர்கள் பலருடனும் அவருக்கு அறிமுகம் இருந்தது. எல்லோரையும் சந்தித்து தமிழீழ விருதலைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதில் அவர் ஈடுபட்டார். ஓயாது உழைத்தார். இலண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் நடைபெற்ற மாநாடுகளிலும், கூட்டங்களிலும் அவரைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

தள்ளாத வயதிலும் அவருடைய மன உறுதியைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

அவருக்கு நடைபெறும் முத்து விழா தமிழ்த் தொண்டுக்கு நடைபெறும் பாராட்டுவிழா ஆகும். அவரது நெஞ்சுரமும், துணிவும் முன் மாதிரியாகக்கொண்டு பின்பற்றத் தக்கவையாகும்.

அவரை வாழ்த்தும் வயது எனக்கில்லை. ஆனாலும் அவர் மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும்.

தமிழர்களுக்கு வழிகாட்டவேண்டும் என வேண்டுகிறேன் ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் வாழும்போதே கௌரவிக்கப்படவேண்டும், உயிரோடு இருக்கும்போதே பாராட்டுக்கள் குவிக்கப்படவேண்டுமென்ற ஒரு உன்னதமான கொள்கையை பெரியார் வைகுந்தவாசனின் முத்துவிழாவில் முன்வைத்திருப்பவர் பிரபல எழுத்தாளர், ஒலிபரப்பாளர், பேச்சாளர், விமர்சகர், நிகழ்ச்சி ஒப்பனையாளர் விமல் சொக்கநாதன்.



# வையகம் போற்ற வரலாறு சமைத்தவர்

வழக்கறிஞர் விமல் சொக்கநாதன்

முத்து விழாக் காணும் மூத்த தமிழ்ப் பெரியாருக்கு விழா எடுப்பதும், மலர் வெளியிடுவதும் அற்புதமான எண்ணங்கள். கருவாக உதிர்த்த எண்ணங்களை வெற்றிக் கருமங்களாக நிறைவேற்றும் விழாக் குழுவினர் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

தன் ஊருக்கு, தன் இனத்துக்கு, தன் ஆலயத்துக்கு தொண்டுகள் புரிந்த ஒரு உண்மை ஊழியனை வாழும் காலத்தில் புறக்கணித்து நாயிலும் கேடாக அவமதித்து விட்டு பின்னர் அவர் இறந்ததும் கோலாகலமாக இறுதிச் சடங்கு, அடுக்கு மொழிப் பிரசங்கம், அவரது படங்களுடன் நினைவு மலர், ஞாபகார்த்தக் கூட்டம் இப்படி அமரர் பெயரால் பெயர் சம்பாதிக்க முற்படுவோர் பலர்.

ஒருவர் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும். உயிரோடு இருக்கும்போதே பாராட்டுக்கள் குவிக்கப்பட வேண்டும். தன்னலம் கருதாது தான் ஆற்றிய தொண்டுகளை தனது சமூகம் நினைவு கூர்ந்து நன்றியுடையோராக இருக்கிறது என்று மூத்தவர் உணரும் போது அவரது மனம் அடையும் மகிழ்ச்சியை, அவரது குடும்பத்தின் மத்தியில் அவருக்கு ஏற்படும் பெருமையை, பெரு மகிழ்ச்சியை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். எனவேதான் மூத்தவர்களைக் கௌரவிக்கும் விழாக்களை நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

பெரியார் வைகுந்தவாசன் அவர்கள் சாதாரண தமிழ்ப் பெரியார் அல்ல. அவரது வாழ்க்கையே ஒரு வரலாறு. ஒரு தொழிற் சங்கவாதியாக, ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியராக, ஒரு வழக்கறிஞராக, ஒரு நீதிபதியாக சிங்க நடை போட்டவர் அவர். ஆனாலும் அவரது பெயரை வானுயர ஒலிக்கச் செய்தது அவரது ஐ.நா. மன்றச் செயல்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் நடாத்தப்படும் அநீதிகளை எங்களில் பலர் பல விதங்களிலும் கண்டித்து எமது குரலை எழுப்புகின்றோம். இலங்கை அமைச்சர் கலந்து கொண்ட இலண்டன் கிரிக்கெட் போட்டியில் ஒரு கண்டனம். பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் வரும்போது இலங்கைத் தூதரகங்களின் முன் கண்டனம். கறுப்புக் கொடிகள், அமைதி ஊர்வலங்கள் இப்படிப் பல விதமாகவும் கண்டனங்களை நடாத்தி உலக மக்களின் கருத்தை, உலக பத்திரிகைகளின் கருத்துக்கள் மூலமாக கவர முற்படுகின்றோம். ஆனால் பெரியார் வைகுந்தவாசன் மனதில் பளிச்சிட்டது ஒரு எண்ணம். இன்றைய சந்ததியினர் அதனை ஒரு நகைச்சுவை விடயமாகக் கூடக் கருதலாம்.

ஐக்கிய நாடுகள் பெரு மண்டபத்தில் அடுத்ததாக இலங்கைத் தூதுவர் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது. பரபரப்பின்றி அமைதியாக மேடைக்குச் சென்றார் திரு. வைகுந்தவாசன். தான் இலங்கைத் தூதுவன் அல்ல. தமிழ் ஈழத்தின் ஒரு குடிமகன் என்று ஆரம்பித்து தமது இனத்தின் பிரச்சனையை அந்த உலக அரங்கில்- அந்த உலக அரங்கின் அனுமதி இல்லாமலேயே முன் வைத்தார். அவரது செயலைக் கண்டு ஐக்கிய நாடுகள் மன்றம் அதிர்ந்தது. பாதுகாப்பு அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள். இவ்வளவும் செய்த பின் பெரியார் வைகுந்தவாசன் அவர்கள் எதுவும் செய்யாதவர், தெரியாதவர் போல் தமது அன்றாட வேலைகளில் ஈடுபட்டார்.

வயதில் மூத்தவர்களை மதிக்கும் பண்பு நாங்கள் புகுந்த இந்த நாட்டில் கிடையவே கிடையாது. நாங்கள் பிறந்த நாட்டிலும் அந்தப் பண்பு குறைந்து கொண்டே வருகின்றது. !!ஏ...பெரிசு கொஞ்சம் தள்ளிக்க!! இல்லை உனக்குச் சங்கு தான் !! என்று சினிமாப் பாடல்களில் நகைச்சுவை என்ற

(தொடர்ச்சி பக்கம் 15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் விடுதலை வேட்கையை அறியச் செய்த வைகுந்தவாசன்

மா. க. ஈழவேந்தன்
பொதுச்செயலாளர்
தமிழீழ விடுதலையணி

அவைத்தலைவர் அவர்களே! உலகத்தலைவர்களே!

உலகின் தலையாய அமைப்பான ஐ. நா. மன்றத்தில் அடக்கி ஒடுக்கப்படும் ஈழத்தமிழ் மக்களுக்காக நாம் குரலெழுப்ப முடியாவிடின் நாம் வேறெங்கு போக முடியும்.

இந்தியாவுக்கும் சிறீலங்காவுக்குமிடையே உள்ள 25 இலட்சம் மக்கள் கொண்ட தமிழ் ஈழத்திலிருந்து வருகை தந்துள்ளேன். என் பெயர் கிருஷ்ணா.

தமிழ்த் தேசிய இனத்தை அழிக்கும் இனப்படுகொலையில் சிறீலங்கா அரசு தொடர்ந்து ஈடுபடுகிறது. நாம் தனித் தேசிய இனமாக வாழ தன்னுரிமையை (சுயநிர்ணய உரிமையை) நிலை நாட்டி உள்ளோம்.

இந்திய எல்லைப்பரப்பில் அமைதிக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்ற முறையில் ஈழத்தமிழ் சிக்கல் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இச்சிக்கலுக்கு தீர்வு காணுகின்ற முறையில் உலக தலைவர்களாகிய நீங்கள் உதவி செய்யாவிட்டால் பாலஸ்தீனிய சிக்கல் போல் - சைப்ரஸ் சிக்கல் போல், ஈழத்தமிழர் சிக்கல் பெருவடிவம் - விசுவரூபம் எடுக்கும்.

அவைத்தலைவரின் இசைவு பெறாது பேசியதைப் பொறுத்திடுக.

உங்களின் உதவியை வேண்டி நிற்கிறோம். நன்றி.

தமிழீழம் வாழ்க!

என்று 1978 ல் அக்டோபர் 5ல் ஐ. நா. மன்றத்தில் கிருஷ்ணா வைகுந்தவாசன் 3 மணித்துளிகள் தான் பேசிய போதும் வையத்தை ஈர்க்கின்ற - வையம் புகழும் உரையாக இவரின் உரை அமைந்துள்ளது. ஒன்றே முக்கால் அடியால் உலகளந்த பெருமை வள்ளுவருக்கு உண்டு. மூன்றே மணித்துளிகளில் ஈழத்தமிழர் சிக்கல் யாது என்பதனை உலகம் அறியச் செய்த பெருமை வைகுந்தவாசனையே சேரும். ஈழத்தில் தமிழன் நாளும் பொழுதும் செத்துக் கொண்டிருக்கிறான். சாகடிப்புக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறான். எம் தமிழீழ விடுதலைப்புலிகள் தம் உயிரைத் துச்சமென மதித்து ஆற்றிவரும் வீரதீர செயல்கள் வரலாற்றில் இடம் பெறும் நிகழ்ச்சிகளாகும். ஆனால் எம் சாவு வீண் சாவாக அமையக் கூடாது. அது பொருள் பொதிந்த சாவாக அமைய வேண்டும். எம் சாவின் தன்மையை உலகம் உணர வேண்டும். உலகத்தை உணரச் செய்ய வேண்டும். இந்த அரிய பணியை எவரும் எதிர்பாராத காலகட்டத்தில் 22 ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றி வைத்தவர் நம் கிருஷ்ணா வைகுந்தவாசன். இந்நிகழ்ச்சியால் வைகுந்தவாசன் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். அதற்கு மேலாக ஈழத்தமிழன் போராட்ட வரலாறும் வையம் அறியும் வரலாற்று நிகழ்ச்சியாக மாறியுள்ளது. இந்த செயற்கரிய செயலை எவரும் எண்ணிப் பார்க்காத கால கட்டத்தில் திரு. வைகுந்தவாசன் நிறைவேற்றியதற்கு மக்கள் அவர்களுக்கு என்றும் கடப்பாடு உடையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984ல் அமெரிக்காவில் நாஷுருட்டில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் ஈழ மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அம்மாநாட்டில் கலந்துகொண்ட திரு. வைகுந்தவாசன் அவர்கள் ஐ.நா. மன்றத்திற்கு என்னை அழைத்துச் சென்று தான் உரை நிகழ்திய இடம் உட்பட ஐ.நா. மன்றத்தின் பல்துறைப்பணியின் பாங்கினை எனக்கு விரிவாக விளக்கிய நிகழ்ச்சி பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.

## 1985ல் ஐ. நா. மன்றத்தில் நான்

இத்துாண்டுதலே 1985ல் ஐ. நா. மன்றத்தின் 40 வது நிறைவு விழாவில் பார்வையாளராக கலந்து கொள்ளும் வாய்ப்பினை எனக்கு வழங்கியது. இதன் விளைவு ஐ. .நா. மன்றத்தின் தொடர்பு அலுவலர் திரு. மெக்காதி அவர்களுடனும் மற்றும் அம்மாநாட்டில் கலந்து கொண்ட பல நாடுகளின் பேராளர்களோடும் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இவ்வாண்டில்தான் இந்தியாவின் ஐ. நா. மன்றத்தின் பேராளராக விளங்கிய நடராஜன் கிருஷ்ணனுடன் உளம் கலந்து உரையாடும் வாய்ப்புக்கிடைத்தது. அத்தோடு ஐ. நா. மன்றத்தில் எதிர்ப்புறத்தில் அமைந்திருந்த அரசு சார்புகளற்ற அமைப்புகளான (N.G.O'S) பாலஸ்தீன விடுதலை இயக்கம், அனைத்துலக மன்னிப்புக் கழகம், மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றோடும் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. இவையனைத்திற்கும் வித்திட்ட பெருமை திரு. வைகுந்தவாசனையே சாரும் என்று நன்றி உணர்வோடு நவில விழைகின்றேன்.

## தந்தை செல்வா 1975ல் ஈட்டிய வெற்றி

தமிழீழத்தின் தந்தை செல்வா 1975ல் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் ஈட்டிய வெற்றி பின்வரும் முறையில் அமைந்திருந்தது. தன்னுடன் போட்டியிட்டவர் வெறுமனே 9407 வாக்குகளைப் பெற்ற நிலையில் தந்தை செல்வா 16,000 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று மொத்த எண்ணிக்கையாக 25,927 வாக்குகளைப் பெற்று வாகை சூடினார். முழு இறைமை பெற்ற தமிழீழத்தையே ஈழத்தமிழ் மக்கள் நாடி நிற்கிறார்கள் என்பதற்கு வழங்கப்பட்ட தீர்ப்பாகவே இத்தேர்தலை யான் கருதுகிறேன் என்று தந்தை செல்வா கூறிய கூற்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்று முதன்மை வாய்ந்த கூற்றாகும்.

இக்கூற்றுக்கு வழிமொழி கூறும் நிலையிலேயே 1976ல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்த தீர்மானம் அமைந்திருந்தது. அதாவது தமிழீழம் என்பது முடிந்த முடிவாக கொள்ளப்பட்டது. 1977ல் நடைபெற்ற தேர்தலில் தீர்ப்பும் தமிழீழம்தான் முடிந்த முடிவு என்ற தமிழ் மக்களின் தீர்ப்பை உலகிற்கு பறைசாற்றியது. 1977ல் நடைபெற்ற தேர்தலை பொதுவழக்கில் தேர்தல் என்று கூறப்பட்ட போதும் உண்மையில் பொதுமக்கள் அளித்த மாற்ற முடியாத தீர்ப்பாகவே (Mandate) தமிழுலகம் ஏற்றது.

## தொய்வை அகற்றிய தெம்பு தரும் உரை

எனினும், தமிழீழத்தை ஓங்கி ஒலித்த தந்தை செல்வா, மறைந்த நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்ப தலைமையேற்ற திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் அரசியலில் தடம் புரண்ட போது தமிழீழ மக்கள் ஏக்க உணர்வுக்கு ஆளானார்கள். அந்த ஏக்கத்தைப் போக்கி வாட்டத்தை அகற்றி ஊக்கத்தை - விடுதலை வேட்கையைத் தருகின்ற நிகழ்ச்சியாகவே வைகுந்தவாசனின் 1978 அக்டோபர் 5ல் நிகழ்த்திய ஐ. நா. மன்றத்தின் உரை விளங்கியது.

மூன்றே மூன்று மணித்துளிகள் தான் திரு. வைகுந்தவாசனின் ஐ. நா. மன்ற உரை அமைந்தது. அமெரிக்காவில் புகழ் பெற்ற குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சி பற்றிய உரையும் மூன்று மணித்துளிகள் தான் கொண்டிருந்தது. ஆனால் அது உலக வரலாற்றை மாற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கமையவே வைகுந்தவாசனின் உரையும் சிறீலங்கா அரசைத் திகிலடையச் செய்தது என்பதற்கு இலங்கையின் அன்றைய வெளியுறவுத் துறையின் மூத்த அலுவலராகிய திரு. டி.டீ. எஸ். ஏ. திசாநாயகா தனது சிறீலங்கா படும் துயர் நூலில் The Agony of Sri Lanka 1983 வைகுந்த வாசன் ஆற்றிய பணியை தான் வாழ்த்த விரும்பாத நிலையிலும் வாழ்த்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதற்கு அந்நூலில் குறிக்கப்பட்டுள்ள குறிப்புகள் சான்று கூறும்.

அது போன்ற சிங்கள வெறி உணர்வுக்கு வடிவம் கொடுத்த அன்றைய (சன்) Sun இதழ் 9 அக்டோபர் 78 ல் திரு. வைகுந்தவாசனைத் தாக்கி வெளியிட்ட செய்திகள் சான்று கூறும். 20 அக்டோபர் 78ல் India abroad இதழில் மூத்த செய்தி ஆசிரியர் பி. பி. கூப்பர் மிக நுணுக்கமாக சுவைபட தந்த செய்திகள் திரு. வைகுந்தவாசனின் நுண்மான் நுழைபுலத்திற்கும் காலமறிந்து மிகத்திறம்பட ஈழத்தமிழர் சிக்கலை உலகறிய அவர் செய்த பாங்கினை ஏற்றமுற உலகிற்கு எடுத்துரைக்கிறது.

இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பக்கத்துணையாக மேலும் வலுவூட்டுகின்ற முறையில் பி. பி. சி செய்தியும், இலங்கையிலும், இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்தில் அன்று வெளிவந்த செய்திகளும் ஒவ்வொரு ஈழத்தமிழனையும் இறும்பூதி எய்தி இறுமாப்பு எய்தும் வகையில் அமைந்திருந்தன.

வைகுந்தவாசனின் ஏனைய பணிகள்: வைகுந்தவாசன் 25 ஆயிரம் ஊழியர்களைக் கொண்ட ஜி. சி. எஸ். யு என்ற தொழிற்சங்கத்தின் செயலாளராக விளங்கியதை நாடறியும். 100,000 எண்ணிக்கை கொண்ட அனைத்திலங்கை பொதுப்பணித்துறை தொழிற்சங்கங்களை முறையாக இயக்கி இணைச்செயலாளராக அவர் விளங்கிய வரலாற்றினையும் நாடறியும். இவர் மக்கள் குரல் People's Voice என்ற ஆங்கில இதழை 1951 - 1953 ல் நடத்தி முற்போக்கு சிந்தனையை வளர்த்தமைக்கு நாம் நன்றி கூற விரும்புகிறோம். அவர் சீனா சென்றும் சோவியத் உருசியா சென்றும் கண்ட நிகழ்ச்சிகளை Three months in New China and Soviet Union புதிய சீனாவிலும் சோவியத்யூனியனிலும் மூன்று மாதங்கள் என்ற நூல் திறம்பட எடுத்தியம்புகிறது. உலகின் அமைதி காண ஆசியா - பசிபிக் அமைதி மாநாடுகளிலும் அவர் கலந்து கொண்டுள்ளார்.

## வையம் ஏற்றும் வைகுந்தவாசன்

திரு. வைகுந்தவாசன் தொடாத துறைகள் இல்லை. தொட்டுத் துலங்காத துறைகளும் இல்லை. எனினும் அவருக்கு வரலாற்றில் அழியாப்புகழைத் தருவது 1978ல் அக்டோபர் 5ல் ஈழத்தமிழர்களுக்காக ஐ. நா. மன்றத்தில் 3 மணித்துளிகள் மட்டுமே முழங்கிய முழக்கமே. அப்பெருமகன் இன்று தனது 80வது அகவை நிறைவு விழாவைக் கொண்டாடுகிறார். அவர் நூறாண்டு மட்டுமல்ல, அதற்கு மேலாகவும் பல்லாண்டுகள் வாழ்க! வாழ்க! வென வாழ்த்துகிறோம். தமிழீழம் காண்பதென்பது அவர் கண்ட கனவு. அவர் கண்ட கனவை நினைவாக்குகின்ற முறையில் அவர் முழங்கிய ஐ. நா. மன்றத்தில் இன்று 186 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அந்த எண்ணிக்கை 190 ஆக உருவாகுமுன்பு - பூத்ததடா தமிழீழம்! புலர்ந்ததடா தமிழன் வாழ்வு - என்ற கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைத் தொடரை மெய்ப்பிக்கின்ற முறையிலும் திரு. வைகுந்தவாசன் மனம் நிறைவு கொள்கின்ற முறையிலும் தமிழீழத்தின் புலிக்கொடி பட்டொளி வீசி ஐ. நா. மன்றத்தில் பறப்பது உறுதி. அந்த தாயின் மணிக்கொடி பறக்கும் காட்சியினைக் கண்டு நாம் உவகையில் மூழ்கி அந்தத் தாயின் மணிக்கொடியை வாழ்த்தி வணங்குவோமாக. இதுவே திரு. வைகுந்தவாசனின் 80 ஆண்டு நிறைவு விழாவிற்கு நாம் வழங்கும் வாழ்த்துரையாக- அன்பளிப்பாக அமையட்டும்.

வையம் ஏற்றும் வைகுந்தவாசன் புகழ் வாழ்க!
வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததை முடிப்பவர்



ராஜகோபால்

**வைராக்கியமான வைகுந்தவாசனுக்கு வைராக்கியம் நிறைந்த அடக்கமான மனைவி.**

**மாவீரன் பிரபாகரன் தலைமையில் மலரும் தமிழ் ஈழம் வைகுந்தவாசன் பெயரை மறக்காது சொல்லும்.**

லண்டனில் தமிழ் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு சாதனை படைத்துக் கொண்டிருக்கும் துணிவும் விறுவிறுப்பும் நிறைந்த புதினம், ஈழகேசரி ஆசிரியர் ராஜகோபாலின் இதயதாகம்.

நினைத்ததை முடிக்கும் வைர நெஞ்சம் படைத்த வித்தியாசமான மனிதர் இந்த வைகுந்தவாசன். கடந்த பதினைந்து வருட காலமாக அவரோடு நெருங்கிப் பழகிய காலத்திலும் சரி, அதற்கு முன்னர் தமிழீழத்துக்கு ஐ. நா. .உலக மண்டபத்தில் அரங்கேற்றம் நடத்தியபோது அவரைப் பற்றிக் கடந்த காலத்தை அறிய முற்பட்டபோதும் சரி, அவரை நான் இப்படித் தான் புரிந்து கொண்டிருக்கிறேன். பிரபலமாக வேண்டும் என்பதற்காக குதம்பல்பளுக்குள் நின்றுகொண்டு கூச்சல் போட்டவரல்ல. பன்னாட்டு மன்றத்தில் சடுதியாக நிகழ்த்திய பேச்சுமல்ல. அவரது ஆழ்ந்த அரசியல் சிந்தனையின் விளைவாக ஐ. .நா. .வில் அந்தக் குரல் ஓங்கி ஒலித்தது. ஒருவர் எவ்வளவு நேரம் பேசுகிறார் என்பது முக்கியமல்ல. இரண்டே இரண்டு நிமிடம் பேசிய ஆபிரகாம் லிங்கனது பேச்சு முதன்மை பெற்றது. இந்த வகையில் தன் சில நிமிட உரையாடலால் உலகத்தையே தன் பக்கம் இழுத்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர் இவர்.

ஆங்கில வாரப் பத்திரிகையொன்றை இரண்டாண்டு காலம் நடாத்தியிருக்கிறார். 25 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட மிகப் பலம் மிக்க அரசாங்க லிகிதர் சங்கத்தின் (GCSU) பொதுச் செயலாளராக இருந்து 1950ம் ஆண்டு தொழிற்சங்க ஈடுபாடு காரணமாக பழிவாங்கப்பட்டு அரசாங்க சேவையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட வைகுந்தவாசன் 1951ம் ஆண்டு ஆரம்பித்ததே People Voice என்ற இந்தப் பத்திரிகை. மருதானையில் அச்சுக் கூடம் ஒன்றை ஸ்தாபித்து அதன் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்தார். அப்போது அப் பத்திரிகைக்கு பல்வேறு ஆக்கங்களை எழுதியவர்கள் பிரபலமானவர்கள். பத்திரிகை அலுவலகத்துக்கும் வந்து போவார்கள்.

பீற்றர் கெனமன், டாக்டர். எஸ். ஏ. விக்கிரமசிங்க, ரி. பி. இலங்கரத்தினா, பிலிப் குணவர்தனா, எஸ். டி. பண்டாரநாயக்கா, செனட்டர் நடேசன், பி. கந்தையா, என். சுண்முகதாசன், எம். கார்த்திகேசன் போன்றவர்களின் எழுத்துக்கள் அவ்வப்போது இவர் பத்திரிகையை அலங்கரிக்கும்.

அனுபவமில்லாத துறை, ஆனால் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்குரலாக ஒரு பத்திரிகை இரண்டாண்டு காலம் நடத்தியது அவர் வைராக்கியம் தான். அவரது மனைவி மகேஸ்வரி தான் People Voice பத்திரிகையின் நிர்வாகி. அச்சுக் கோர்ப்பது முதல் பத்திரிகை மடிப்பது, அடுக்குவது முதல் நிர்வாகம் வரை சகல பொறுப்புக்களும் அவருடையது.

இருபத்தைந்து வயதில் கொழும்பில் குடும்பப் பத்திரிகை நிர்வாகப் பொறுப்புக்களைச் சுமக்க ஆரம்பித்தத்திலிருந்து இன்றுவரை தன் கணவன் குறிப்பறிந்து நடக்கும் நல்ல மனைவியாக வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் மகேஸ்வரி அம்மையார் வாழ்வு ஐயாவின் அனைத்து வாழ்வோடும் இரண்டறக் கலந்தது.

'சிரித்திரன்' சுந்தர் பெருமதிப்புக்குரியவர். அவரோடு பழகிய சில நாட்கள் நெஞ்சுக்கு நிறைவைத் தரும் நிறைவான பொழுதுகள். ஐயாவின் பத்திரிகையில் அவரது கார்ட்டுன் ஒவ்வொரு இதழிலும் முதலப் பக்கத்தில் வெளியாகும்.

வைகுந்தவாசன் அவர்கள் தனது வீட்டில் பைன்ட் பண்ணி வைத்திருக்கும் மேதை சுந்தரின் காட்டுன்களைப் பார்த்து ரசித்தேன். அந்த நேர அரசியல் அவலங்களை அழகாகப் படம் பிடித்துக் காட்டுவார். நம்மவரில் ஆற்றல் மிக்கவர்களை தேடிப் பிடித்து அவர்கள் திறமைகளை வெளிப்படுத்துவது ஐயாவுக்குப் பிடித்தமானது.

பத்திரிகைத்துறையில் அவருக்குக் கிடைத்த பல்வேறு அனுபவங்களை என்னோடு பலதடவை பகிர்ந்து கொண்டிருக்கிறார். இலங்கை மண்ணில் புகழுக்குரியவர்களாக வாழ்ந்த அரசியல் மேதைகளுடன் எல்லாம் நெருங்கிப் பழகியிருக்கிறார். அவரே ஒரு பெரும் மேதை தானே.

எனது 'தமிழன்' 'ஈழகேசரி' 'புதினம்' பத்திரிகைகளில் எல்லாம் எழுதியிருக்கிறார். அதன் வளர்ச்சியில் எல்லாம் அக்கறை கொண்டு முடிந்த உதவிகளை வழங்கியிருக்கிறார். 5ஆயிரம், 3ஆயிரம், 2ஆயிரம் என்று தயங்காது காசோலைகளை எழுதி வருடத்தில் இரண்டு முறையாவது அனுப்பிவைப்பார். இலங்கைப் பணத்தில் தான் அவர் அப்படிக் காசோலைகள் தந்திருந்தாலும் ஏதோ ஒரு வகையில் கொழும்பில் உள்ள நமது செய்தியாளர்களுக்கு அவ்வப்போது அனுப்பி வைக்க உதவியாக இருந்ததை நன்றியோடு நினைவு கூராமல் இருக்க முடியுமா?

என்னைத் தேடி வீட்டுக்கு வருவார். விஷயங்களைக் கொண்டு வந்து தருவார். "ராஜா! கனடாவில் இருந்து கொண்டு வந்த பேப்பர்கள் எல்லாவற்றையும் எடுத்து வையும். நான் பதினொரு மணிக்க வருவேன்"- சொன்ன நேரத்துக்கு வருவார். சமீப காலமாக அவர் வருவதில்லை. அம்மாவைத் தான் அனுப்புவார். 'அம்மா ஏன் வந்தீங்கள்? நான் வந்திருப்பேனே' என்பேன்."ஐயாவைத் தெரியும் தானே அவருக்கு உடனை உடனை செய்யவேண்டும்' என்று சொல்லுவா. கணவன் மனம் நோகக் கூடாது என்பதில் அம்மாவுக்கு இப்போதும் அவதானம். ஐயா இலண்டனில் எப்போது பாரிஸ்டர் ஆனார்? என்று சமீபத்தில் அம்மாவைக் கேட்டேன். 1955ல் இலண்டன் வந்தோம். இரண்டு வருடங்கள் தங்கியிருந்து படித்துப் பட்டம் பெற்றார். அப்போது மகாத்மா காந்தி மண்டபத்தில் வீணை வாசித்ததை மறக்க முடியாது என்று கூறிவிட்டு, ஐயாவால் இப்போது தனித்து இயங்க முடியாது. அவருக்கு இப்போ எல்லாவற்றையும் நானே செய்கின்றேன். அவருக்கு எல்லாம் செய்து அவரை இப்படிச் சந்தோஷமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இது தான் என் விருப்பம் என்றார் ■

---

**வையகம் போற்ற......**

பெயரில் அருவருப்பான வசனங்கள் எழுதப்படுவதைக் கேட்டு மனம் வெதும்புகின்றோம். காவோலைகளைக் கண்டு குருத்தோலைகள் ஏளனம் செய்வது ஒரு பாஷன்.

பெரியவர் வைகுந்தவாசன் போன்றவர்கள் நடமாடும் அனுபவக் களஞ்சியங்கள். அந்தக் களஞ்சியங்களைத் திறந்து அங்கு காணப்படும் அனுவப முத்துக்களை வெளிக் கொணர்ந்தால் எம்மைப் போன்ற சக நோக்கம் கொண்டவர்களும் பயன் பெறலாம். விழாக் குழுத் தலைவர் எழுத்தாளர் பொன்.பாலா போன்றவர்கள் இது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இந் நன்னாளில் பெரியாரை வாழ்த்தும் அளவுக்கு நான் பெரியவன் அல்ல. ஆனால் முத்துவிழாக் காணும் பெரியார் வைகுந்தவாசன் இன்னும் பல விழாக்கள் காண வேண்டும். அதற்கான அருளாசியை நான் வணங்கும் கருணைக் கடல் வழங்க வேண்டுமென்று பிராத்திக்கின்றேன் ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## An Articulate Leader

The concept of socialism was considered as a disease by most of the institutions and by majority of the middle class whose influence among the common people especially among the Tamils was dominant. But Socialism in Srilanka was based on a firm belief of establishing a more humane and fairer society based on Religious beliefs and this attracted young idealists. Mr.Vaikunthavasan is one of them.

Mr. Vaikunthavasan as all socialists in 1950s believed in holding the Tamils and Sinhalese together in peace, but with a sense of identity and mutual respect. He felt this was essential to accommodate social changes to achieve a more humane and fairer society and political stability.

Mr. Vaikunthavasan as the Secretary General Public Service GCSU Trade Union of Ceylon and Joint Secretary All Island Middle Class and Public Service Trade Unions 1947-1950 worked hard to defend and extend the working class interest. His aggressive approach in pursuing this noble goal made the UNP government sack him from his job. After independence from British rule United National Party (UNP), responsible for running the country and the institutions affecting millions of common folks failed to respond to the new challenges that faced the country after independence but was determined to weaken the Trade Unions and more concerned with helping the private sector.

Mr. Vaikunthavasan was the most articulate of all the trade union leaders and started the English Weekly News Paper People's Voice. Mr. Vaikunthavasan was the Editor, Mrs. Vaikunthavasan the Manager and his father Mr. A. Krishnapillai the Manager of the People's Press. He used the News Paper with his personal appeal to bring an understanding between all the Socialists parties and all the trade unions to create a national resolve to fight against the policies followed by the UNP and to establish a socialist government.

The riots of 1958, left most of the Tamils socialist with unbelievable disappointments. This was the case with Mr. Vaikunthavasan, still believing on the noble cause for fighting injustice and for a fairer and humane society felt Srilanka should go back to a system as it existed before the British rule, two separate states, one for the Tamils and one for Sinhalese, a solution for bringing peace in the Island. With this in mind he has joined forces with all the other Tamil groups with the same objective. He has aggressively contributed in many ways to bring the Ealam Tamils Problems to the attention of the International Community. Mr. Vaikunthavasan's greatest contribution to the TAMIL CAUSE IS THE FACT that he raised our issue at the U.N. General Assembly in Newyork. This was in 1978 and still the matter remains unsolved. He has spent all his talents and resources at his disposal for the Eelam Tamil cause.

From 1977, continuously Mr. Vaikunthavasan has been living with his family in London. He took part in many activities engaged in by the Tamils in UK. The activities included religious community welfare etc., We, people of Alaveddy are proud that Vaikunthavasan is from Alaveddy and one of the Patrons and founder members of the Alaveddy Makkal Sangam.

Long Live Vaikunthavasan

*Vairavamoorthy*

Treasurer, Alaveddy Makkal Sangam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம் என்பதே கனவும் நினைவும்



சிலரைப் "பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி" என்பார்கள். ஆனால் திரு.வைகுந்தவாசன் அவர்களோ பார்வைக்கே புலி என்று கூறுகிறார். சிந்தனையிலும், எழுத்திலும், ஆக்கங்களிலும் நோக்கங்களிலும், தமிழீழத்தாகத்திலும் புலியாக இருக்கும் திரு.எஸ்.திருச்செல்வம். இவர் கனடாவிலிருந்து வெளிவரும் "தமிழர் தகவல்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்.

தமிழீழப் புரட்சியாளர் உயர்திரு கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள் எண்பது வயதினை எட்டிவிட்டார் என்பதை நம்பவே முடியவில்லை. அவரது முத்துவிழாவுக்கு நான் ஒரு வாழ்த்து அனுப்ப வேண்டுமென்று இலண்டனிலிருந்து அன்பர் ஐ.தி.சம்பந்தன் வினயமுடன் வேண்டினார். பொன். பாலசுந்தரம் அண்ணர் இதனையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக மீண்டும் அவர் நினைவூட்டியபோது மதிப்புமிகு வைகுந்தவாசன் அவர்கள் சுமார் ஏழோ அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவுக்கு வருகை தந்திருந்தவேளை, என்னைத் தேடி வந்து சந்தித்த அந்தக் காட்சி நிழலாடியது.

சிலரைப் "பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி " என்று வர்ணிப்பார்கள். ஆனால் திரு. வைகுந்தவாசன் அவர்களோ பார்வைக்கே புலி ஆதலால் மிகுதியை விளக்க வேண்டியதில்லை. தமிழ் இரத்தம், தமிழ் உணர்வு, தமிழார்வம் என்று தமிழுக்கே உயிராக வாழ்பவர். தமிழீழம் என்பதே இவரது கனவும் நினைவும். அதற்காகத் தனது உயிரையும் கொடுக்கத் தயங்காத இளைஞர்.

" UN tightens its security after 'Eelam' intruder seized rostrum" என்ற தலைப்புச் செய்தியை கொழும்பிலிருந்து வெளிவந்த சன்" பத்திரிகை முன்பக்கத்தில் கொட்டை எழுத்தில் 1978ம் ஆண்டு அக்டோர் மாதம் 7ந் திகதி வெளியிடுவதற்குக் காரணமாயிருந்தவர் திரு. வைகுந்தவாசன் அவர்கள். ஐ.நா.சபையில் திடீரென நுழைந்து மேடையிலேறி, ஒலிவாங்கியைக் கையிலெடுத்து தமிழீழப் பிரகடனம் செய்யும் துணிச்சல் வைகுந்தவாசன் அவர்களைத் தவிர வேறெவருக்கும் வரமுடியாதது.

இவ்வாறு எத்தனை எத்தனையோ விடயங்களை இந்த "முத்து" மலரில் பக்கம் பக்கமாக நாம் வாசிக்கலாம்.

"Indian deports Eelam Leader Vaikunthavasan" என்று கொழும்பு "ஐலண்ட்" பத்திரிகை 1982 நவம்பர் 11ல் செய்தி வெளியிட்டமையும், "What caused Vaikunthavasan's deportation?" என்ற முகப்பில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த "சற்றர்டே றிவியு" பத்திரிகை 1982 நவம்பர் 13ந் திகதிய இதழில் விளக்கமளித்தமையும் சுவையான சுதந்திரச் சமாச்சாரங்கள். தொழிற்சங்கவாதியாக ஆரம்பித்து, நீதிபதியாகி, தமிழீழப் புரட்சியாளராக மாறிய வைகுந்தவாசனை மக்களுக்கு அறிய வைத்த இவ்வாறான பல நறுக்குச் செய்திகள் எனது பாதுகாப்பில் உள்ளன. இவைகளை மீண்டும் மீண்டும் படிக்கையில் புரட்சிச் சிந்தனைகள் பொங்கி எழுகின்றன.

ஈழத் தமிழராகிய எமக்கு எப்போதும் வேண்டப்படுவது தமிழீழம் சம்பந்தமான சர்வதேசப் பிரச்சாரமே. இதனை இருபது ஆண்டுகளுக்கு முன்னரே மிக மிக துணிச்சலுடன் செய்தவர் எங்கள் வைகுந்தவாசன் அவர்கள். அவரது "முத்து விழா" வும் கூட தமிழீழப் பிரச்சாரத்துக்கு ஓர் அங்கமாக அமையும் என நம்பலாம். தமிழீழம் மலர்வதற்கான கட்டியமாக "முத்து மலர்" வெளிவர மனமார்ந்த வாழ்த்துக்கள்.

திரு எஸ். திருச்செல்வம்.
ரொறன்ரோ, கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் குரலோனுக்கு முத்துவிழா

பேராசிரியர் கோபாலபிள்ளை (கோபன்) மகாதேவா

திரு.கிருஷ்ணா வைகுந்தவாசனுக்கு 29.04.2000 அன்று முத்துவிழா நடக்கவிருக்கிறது என்பதையறிந்து மிக மிக மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஈழத்தமிழ் சாதனையாளனுக்கு 80 வயதுகள் பூர்த்தியாகிவிட்டன என்பதை நம்ப முடியவில்லை. இன்றும் அவ்வளவு புத்திக்கூர்மை. மெதுவாகத் தான் செல்லும் பாதையை அவதானித்தே நடப்பார். அளந்தளந்தே பேசுவார். ஆனால் அவரின் சிந்தனையின் ஆழமும், சாதனைகளின் தாக்கமும் அளவிடமுடியாதவை.

இலங்கையின் அரசாங்க சேவையில் நாமிருவரும் ஒரே காலத்தில் சிலவருடம் இருந்திருக்கிறோம் என்பதைப் பிற்காலத்திலேயே அறிந்தேன். இருந்திருக்கிறோம் என்று மட்டும் ஏன் சொல்கிறேனென்றால், நான் பொதுவேலை இலாகாவில் பட்டயம் பெற்ற பொறியியலாளராகச் சேவை செய்த 1955-1961 வருடங்களில் திரு.வைகுந்தவாசன் தனது அரசாங்க லிகிதர் தொழிற்சங்க வேலைநிறுத்தம் முதலிய ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்ததின் நிமித்தம் முழு சம்பளத்துடன், நடத்தை விசாரணைக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். ஆனால், வல்லமையுள்ளோரைக் கீழே அமுக்கி வைத்திருக்க முடியாதென்பதை இலங்கை அரசாங்கம் அன்று அறியவில்லை. இன்றும் அறிவதாயில்லை என எண்ணத் தோன்றுகிறது. எமது வாசனைப் பொறுத்தளவில், அவர்களின் அநியாய நடத்தை, வல்லமைமிக்க வாசனுக்கு இங்கிலாந்து வந்து சட்டக் கல்வி பெற்றுச் சிரேஷ்ட வழக்கறிஞராக உருமாறவும் பின்னர் ஆபிரிக்காவில் நீதவானாக உயர் நியமனம் பெறவும் உதவியுள்ளது. ஐம்பதுகளின் முன்னாண்டுகளிலேயே அவர் தன் தொழிற்சங்கத்தின் செயலாளர் நாயகமாக மக்கள் குரல் என்னும் இலங்கையின் வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஆங்கிலப் பத்திரிகையின் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வெளியிட்டார்.

திரு.வைகுந்தவாசனை நான் முதல் தடவை நேரில் சந்தித்த சம்பவம் இருவராலும் மறக்க முடியாது. 1968-69ல் நான் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சிறு கைத்தொழில் சேவைக் கழகத்தின் இயக்குநர் பதவியைத் துறந்து அடுத்த ஆண்டு யாழ். நவீனசந்தை நிர்மாணத்தைத் தொடங்கிய மயிற் (MITE) நிறுவனத்தை இயக்குநராக நடாத்திக் கொண்டிருந்தேன். எமது சேவைகளில் கைத்தொழிலாளருக்கு ஆலோசனை வழங்குவதும் ஒன்றாக இருந்தது. பாணந்துறையிலுள்ள ஒரு முஸ்லிம் கைத்தொழில் நிறுவனம் தம் தொழிலாளி ஒருவரை தம் உற்பத்தி இயந்திரமொன்றைத் திட்டமிட்டு உடைத்தார் என்று வேலை நீக்கிய வழக்கில் வைகுந்தவாசன் தொழிலாளியின் சார்பில் இலண்டனில் பயிற்சிபெற்ற வழக்கறிஞராக வாதாடினார். நான் அந்த நிறுவனத்தின் ஆலோசகராக தொழில்நுட்பச் சாட்சியம் வழங்கினேன். அன்று என்னை மூன்று மணி நேரம் வாசன் குறுக்கு விசாரணை செய்தார். முடிவில் இருவரும் வியர்வை மழையுடனும், தலைவலியுடனும் அன்று தாமதித்த மதிய உணவை வெவ்வேறு இடங்களில் நின்றே சாப்பிட்டோம். அன்று வாசனின் கட்சிக்காரர் தோற்க வேண்டும் என்றே ஆண்டவர் விதித்திருந்தார் போலும்.

அதன்பின் தொண்ணூறுகளில் ஈழத்தமிழரின் அரசியல் மகாநாடுகள், ஊர்வலங்களிலும் எம்மிருவரின் சொந்த நூல் வெளியீடுகளிலும் சந்தித்து அளவளாவத் தவறுவதில்லை. கடைசியாக நாம் ஒன்றாகத் தோன்றிய சம்பவம் கிட்டுவின் முதலாவது மரண அஞ்சலிக் கூட்டம் என என் நினைவு. அவரது நூல்கள் இரண்டை விமர்சனம் செய்யும் பாக்கியமும் நான் பெற்றுள்ளேன்.

திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன் மில்லியனில் ஒருவர். நீதிநிலையும், தமிழுணர்ச்சியுமுள்ள அரசியல் போராளி. 1978 அக்டோபர் ஐந்தாந் திகதி ஐ.நா.வில் ஈழத்தமிழர் சார்பாக முதல் தடவை ஒலித்த அவரது நீதிக் குரலை அன்று அது உத்தியோகபூர்வமாக இடம்பெறவில்லை எனினும் உலகத்தமிழர் என்றென்றும் மறக்கமுடியாதது. சுடரொளி ஆசிரியர் திரு.ஐ.தி.சம்பந்தன் அண்மையில் எழுதிய கட்டுரையை **"யார் இந்த வைகுந்தவாசன்?"** என்னும் கேள்வியுடன் தொடக்கியிருந்தார். அதற்கு எனது சுருக்கமான விடையாவது **"மக்கள் குரலோன் வைகுந்தவாசன்"** என்பதே. அவர் நீடூழி வாழ்க! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## KRISHNA VAIKUNTHAVASAN
**by Eric Crowther OBE**

For 30 years I worked for the British Council Overseas students Centre in London. Towards the beginning of that time (I think in the late 1950's), I set up a debating group, meeting weekly. It was not an immediate success , at first it attracted four students from different parts of Africa who did not like each other and saw it was a chance to pursue(at tedious length) their Personal vendettas. But I realized that it could only get better and it did, due to the advent of some more articulate and interesting students who started to attend regularly.

One of these was a law student Krishna Vaikunthavasan, who could always be relied upon to make a worthwhile speech on any topic. He would begin slowly, but worked up to an eloquent climax. He was very loyal ! I do not think that he missed a single debate, until he returned to Sri Lanka, when I lost touch with him.

We were to meet again at the commonwealth Judges' and magistrates' Conference in Kuala Lumpur in 1975, when Krishna was accompanied by his charming and kindly wife and then 13 year old son Gandee always anxious to promote his family Krishna asked Lord Denning if Gandee might paint a portrait of him, to which had Denning agreed, and I had the task, through the good offices of the British Council, of getting it back to London as Lord and Lady Denning wanted it to hang in their flat in Lincoln's Inn. Later on Gandee was to become a celebrated portrait painter, being chosen to paint Harold Macmillan for the occasion of his 90th birthday the presentation being made by Prince Philip.

By the time of the Kuala Lumpur Conference Krishna was having difficulties in his professional life. He was a Tamil and the authorities in Sri Lanka insisted that only Sinhalese in which Krishna lacked fluency should be spoken in their courts, so Krishna applied for and obtained a post as a magistrate in Zambia. But soon that country embarked upon an 'Africanisation' policy and Krishna was compelled to give up work which he enjoyed and did competently. I said to him, once a person has been called to English Bar he can come and practise here. So Krishna brought over his family and middle aged now, embarked on a new and successful career in London. Later on, when in this mid-seventies, he stood as a candidate to be M.E.P. in the part of south-west London where he resides. Such is the enterprise of a man who has been my friend for over 40 years now. Now he is apprcaching his 80th birthday, and his many friends will wish him a long and happy retirement with his dear family.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இனத்துக்கென்றொரு நாடு – தனித்தமிழ் நாடு – உருவாகி, அந்தச்
சபையில் அது அங்கத்துவம் பெறுங்காலை, அந்த உரை அந்தப்
புதுவரலாற்றின் முன்னுரையாக திகழும் – இப்படி எதிர் காலத்திலும்
பெரியார் வைகுந்தவாசனின் புகழ் நிலைத்திருக்கும் என்பவர் பிரபல
பத்திரிகையாளர் மாலி. அஞ்சல், நாழிகை வெளியீடுகளின் ஆசிரியர்.

# வரலாற்றில் வைகுந்தவாசன்

வைகுந்தவாசன் ஒருவர்.

உலக சாதனைகளைப் பதிவு செய்யும் "கின்னஸ்" பதிவேட்டில் அவர் பெயர் பதிவாகியிருக்கின்றதோ என்னவோ, அவர் படைத்த சாதனையை இன்னொருவர் படைக்கவில்லை, படைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்குமில்லை.

உலக மன்றான ஐக்கிய நாடுகள் சபையில் தன் குரல் ஒலிக்க, தனக்கென்றொரு நாடு கோரி பலத்த இன்னல்களுடனும், உயிர்த்தியாகங்களுடனும் ஓர் இனம் போராடிக்கொண்டிருக்கையில், அந்த இனத்தின் அவல நிலையை அந்த அதி உயர் சபையில் அத்துமீறிப் பிரவேசித்தாவது உணர்த்திய செயல் பெரும் சாதனை தான்.

அந்த இனத்துக்கென்றொரு நாடு-தனித் தமிழ்நாடு- உருவாகி அந்தச் சபையில் அது அங்கத்துவம் பெறுங்காலை, அந்த உரை அந்தப் புது வரலாற்றில் முன்னுரையாகத் திகழும்.

ஆக, உலகளாவிய ரீதியில் இப்படி ஒருவராகும்போது, உள்நாட்டிலும் இலங்கையிலும் அவர் ஒருவர்.

இலங்கையின் வரலாற்றில், அரசுக்கு எதிராக ஒரு கருத்தைக் கூறவல்ல செல்வாக்கு மிக்க முதலாவது ஆங்கிலப் பத்திரிகையாக " Peoples Voice" என்ற பத்திரிகையை 1951ல் கொழும்பில் அவர் ஆரம்பித்து நடாத்தினார்.

இடதுசாரிக் கொள்கைகளுடன் ஒரு தொழிற்சங்கவாதியாக திகழ்ந்த இவர், அதே காலத்தில் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை வலியுறுத்தி துணிச்சலான பல கண்டனங்களையும் எழுப்பியிருக்கின்றார்.

இப்படி இவ்விரு விதங்களிலும் திரு. வைகுந்தவாசன் வரலாற்றில் நிலைக்கிறார்.

மாலி
(ஆசிரியர்-'அஞ்சல்")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைகுந்தர் பெயர் என்றும் வாழும்

பா. வை. ஜெயபாலன்

ஐ.நா.வில் தமிழீழ நாடு
அரங்கேற வைத்தவரைப் பாடு
என் நாடும் வியந்திடவே
எங் கி:.து அறிந்திடவே
தன்முயல்வால் தமிழீழம் தரணி
எங்கெங்கும் ஒளிர வைத்தார் திறனில்.

பன்னாட்டு அரசறிஞர் அவையில்
பாதுகாப்பு செறிவு பல வகையில்
நன் முறையில் திட்டமிட்டு
நாளாந்தம் சென்று வந்து
அன்றொரு நாள் சில பொழுதுள் ஈழம்
அகிலம் எங்கும் அறிய வைத்தார், வீரம்

நீதிபதி தகமை கொண்டு ஈழம்
நேர் கதியை உணர வைத்தார் பாரும்
சேதி கொண்டு நாடு பல
சென்று திக்கும் ஈழ நிலம்
வாதிட்டு ஆதரவைக் கூட்ட
வைத்திட்டார் உடல் நலமும் வாட்ட

எண்பதிலும் தணியாத தாகம்
எழுற்சி அது அவர் உள்ளத்தில் ஆகும்
இலண்டன் தமிழ் விழாத் தோறும்
கொண்ட தமிழ் உணர்வோடும்
நின்று நின்று மெல்ல மெல்ல வந்து
என்றும் நிற்பார் முடிவு வரை அங்கு.

தனி மனித சாதனையின் சிகரம்
வைகுந்த வாசன் என்று பகரும்
இனிய தமிழ் உணர்வாளன்
எம் தமிழன் பெருமகன் நீர்
நினது கண் முன் தனிநாடாய் ஈழம்
நிமிரும் நின் பெயர் என்றும் வாழும் ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஆயுட்கால தண்டனையில் இருந்து தப்பிய அதிஷ்டசாலி

GOLD YOUNG
*New York*

அமெரிக்கா வல்லரசுக்கே தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு நாடு. விஞ்ஞான, பொருளாதார, அரசியல் ரீதியில் அதற்கு நிகரான நாடு ஒன்றில்லை எனலாம். இவையெல்லாம் அந்த நாட்டின் பெருமைக்குரியவை. அதனால் அகங்காரமும் அங்கு தான் இருக்கின்றது.

தன்னுடன் எவரும் எந்த ஒரு நாடும் ஒரு சுரண்டலைச் செய்வதைக் கூட விரும்பாத ஒரு நாடு. சட்டத்தை தூக்கி எறிந்து விட்டு திட்டமிட்டு முறியடித்து விடும்.

இப்படிப்பட்ட நாட்டில்தான் உலக நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபை இருந்து செயல்படுகிறது. ஊரறிந்த, உலகறிந்த முக்கியஸ்தர்கள் தமது நாட்டின் பிரதிநிதியாக இங்கு வந்து சேர்வதால் இல்லையென்ற பாதுகாப்பு இச்சபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க உளவுப் படையும், அதிரடிப் படையும், பொலிஸ் படையும் இரவுபகலாக கடமையிலிருந்து வருகின்றன. இதைவிட வெளிநாட்டு இராஜதந்திரிகளைக் கவனிப்பதற்காகவும், அங்கத்துவ நாடுகளுக்கிடையில் உள்ள மோதல்களினால் பழிவாங்குவதற்கு வரும் ஏவல்ப் படையினரைக் கவனிக்க கழுகுப் பார்வையுடன் திரியும் சாரதாரண உடையிலான விசேட பயிற்சி பெற்ற படையினரும் இச் சபையைச் சுற்றி முகாமிட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பு ஏற்பாட்டினால் முற்றுகையிடப்பட்டிருக்கும் ஐ.நா.சபைக்குள் போவதற்கான அனுமதியைப் பெற ஏதாவது ஒரு நாட்டின் தூது கோஷ்டித் தலைவர் சிபார்சு செய்ய வேண்டும். இது போல இன்னும் பல சிக்கல்கள்.

இப்படித் தீவிர பாதுகாப்புடன் உள்ள ஐ.நா.பொதுச் சபைக்குள் திரு. வைகுந்தவாசன் எப்படிச் சென்றார் என்பது தான் கேள்வி?

இதற்காக அவர் மூன்று மாதங்கள் வரை நியூ யோக்கில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. தினமும் ஐ.நா.சபைக்குச் செல்லவேண்டியுமிருந்தது. ஆரம்ப நாட்களில் இந்திய ஐ.நா. தூதுக் கோஷ்டியினருடன் பழகிப் பாதுகாப்பு ஊழியருக்கு தாமும் ஒரு பிரதிநிதி தான் என்று உறுதிப்படுத்திவிட்டு பின்னர் தனியாகவே செல்ல ஆரம்பித்து விட்டார்.

ஐ.நா.சபைக்குள் சில சம்பிரதாயங்கள் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டு ஸ்தானிகர் மற்ற நாட்டுத் ஸ்தானிகரைக் கண்டால் அதற்குரிய முறையில் கௌரவ உபசாரம் செய்ய வேண்டும். சாதாரண உறுப்பினர்கள் தமது தகுதிக்கமைய கைலாகு கொடுத்தோ, கட்டி அணைத்தோ, தோளில் கை போட்டோ மகிழ்ச்சி தெரிவிக்க வேண்டும். இச் சம்பிரதாயங்களை எல்லாம் ஒரு சில நாட்களில் இவர் பழகிக் கொண்டார். முக்கியமாக இவர் இப்படிப் பழகியவர்கள் யார் தெரியுமா? ஐ.நா.பாதுகாப்புச் சேவையில் இருந்தவர்கள் தான். அவர்களுக்கெல்லாம் டபிள் சல்யூட் கௌரவம் செலுத்தி மயக்கியது இவர் கெட்டித் தனம் தான்.

அங்கத்தவர்கள் மண்டபத்துக்குள் எல்லோரும் மதுக் கோப்பைகளைத் தாங்கிய வண்ணம் நேசக் கரம் நீட்டிக் கொண்டிருப்பார்கள். தத்தமது நாடுகளுக்கு உலக ரீதியில் ஆதரவு திரட்டுவது சகஜமான நிகழ்வாகவிருக்கும். இதையும் வைகுந்தவாசன் விட்டு வைக்கவில்லை. சிலரிடம் இந்தியாவைப் பற்றிக் கூறிவிட்டு இலங்கைத் தமிழர் பற்றியும் ஒரு சில வார்த்தையைச் சொல்லி விட்டு வேறு வட்டத்துக்கு மாறி விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித் தான் ஐ.நா.வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. தினமும் சபைக்குள் போய் வந்து கொண்டிருக்க சபைப் பாதுகாப்பாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் இவரது முகம் பழக்கமாகி விட்டது. திரு.வைகுந்தவாசனைக் கண்டதும் சிரித்த முகத்துடன் சென்று வரவேற்று உபசரிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இக்கட்டத்தைச் சமாளித்தமை இவருக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும். ஆனாலும் இறுதியாக வரப்போவது எதிர்பாராத திடீர் திருப்பத்தை ஏற்படுத்தி, கைது செய்யப்பட்டு, அமெரிக்கச் சிறைக்குள் ஆயள் காலத்தைப் போக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடலாம் என்ற சூழ்நிலை இருப்பதிலிருந்து தப்புவதற்கு திட்டம் தீட்டவேண்டியிருந்தது. வேறு ஏதாவது விஷயமாக இருந்தால் மற்றவர்களுடன் கலந்தாலோசனை நடத்தலாம். ஆனால் இவ்விஷயம் தனி மனிதனின் மனத்துக்குள் இருக்க வேண்டியிருந்ததால் இடையில் தடுமாற்றங்கள் ஏற்பட்டன. அதையும் பொருட்படுத்தவில்லை. துணிவே துணை என்று தன்னைத் தானே தயார்படுத்திக் கொண்டார்.

பிரச்சனை என்னவென்றால் இலங்கையிலிருந்து ஐ.நா.சபை கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் தூது கோஷ்டியினரின் பார்வையிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வதென்பதே? இலங்கைத் தூதுக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சென்றவர் ஜனாப்.ஏ.சி.எஸ்.ஹமீத். இவருக்கு திரு.வைகுந்தவாசனை நன்கு தெரியும். அதே போல் ஜனாப் ஹமீத்துடன் சென்ற இதர உறுப்பினர்கள் சிலருக்கும் திரு.வைகுந்தவாசனைத் தெரியும்.

திரு.வைகுந்தவாசன் தொழிற்சங்க, அரசியல் பிரமுகராக இருந்து பல போராட்டங்களில் கலந்து கொண்டதனால் இலங்கையில் அவரைப் பெருமளவுபேருக்குத் தெரியும். அதுவும் ஜனாப் ஹமீத்துக்கு அவரைத் தெரியாது என்று நினைப்பதோ, கூறுவதோ எது விதத்திலும் பொருந்தாதவொன்றென்பதை இக் கட்டுரையைப் படிக்கும் வாசகர்கள் அறிவார்கள்.

சபைக்குள்ளேயோ அல்லது வெளியிலோ தற்செயலாக இவர்களில் எவராவது சந்திக்க வேண்டி ஏற்பட்டுவிட்டால் தமது திட்டம் தவிடு பொடியாகி விடும் என்ற கலக்கம் திரு.வைகுந்தவாசனுக்கு ஏற்பட்டதில் தவறில்லை. அதனால் தலைமறைவாகிக் கொண்டார்.

ஜனாப் ஹமீது ஒருபுறமிருக்க அந்த நேரத்தில் அதாவது 1978ம் ஆண்டின் நிரந்தரப் பிரதிநிதியாக ஐ.நா.சபையில் இருந்தவர் காலஞ் சென்ற ஜி.வி.பி.சமரசிங்க என்பவர். இலங்கை வெளிநாட்டமைச்சிலும் நிரந்தரச் செயலாளராக இருந்தவர். இவருக்கும் திரு.வைகுந்தவாசனை நன்றாகத் தெரியும். இலங்கையின் ஐ.நா.தூதுக் கோஷ்டிக்கு தலமை தாங்கிச் சென்ற ஜனாப் ஹமீத், இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி திரு.சமரசிங்க ஆகிய இருவரினதும் பார்வையிலிருந்து தப்புவதற்கு திரு.வைகுந்தவாசன் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல.

இதைச் சமாளிக்க இந்தியக் கோஷ்டியின் நிழலில் இருக்க வேண்டி ஏற்பட்டது. 1978 அக்டோபர் 5ந் தேதியன்றுகூட கூட்டத்தோடு கூட்டமாக அவர் சபைக்குள் பிரவேசித்ததை கூட எவரும் கண்டுபிடிக்கவில்லை.

இப்போது இலங்கைப் பிரதிநிதி கௌரவ ஷாகுல் ஹமீது பேசுவார் என்று சபையின் ஒலிபரப்புக்கருவிகள் அறிவித்தபோது மின்னல் வேகத்தில் ஆனால் அடக்கமாக எழுந்து திரு.வைகுந்தவாசன் மேடைக்குச் சென்று ஈழக் கோரிக்கையையும், ஈழமக்களின் நிலைமையையும் எடுத்துக் கூறினார். திரு.வைகுந்தவாசனின் பேச்சு இடைநிறுத்தப்பட்டது. அரைகுறையில் ஒலிபெருக்கி அவர் கையிலிருந்து பிடுங்கப்பட்டது என்று இலங்கை அரசு அழுது வடித்தது சரியான நிலையல்ல.

பேசவேண்டியதையும் அதில் சொல்ல வேண்டியதையும் சொல்லிய பின்னர் அங்கு வேறு என்ன வேலை. ஜனாப் ஹமீத்தும், திரு.சமரசிங்காவும் செய்வதறியாது திகைத்துப் போய் ஆசனங்களில் கல்லாகி விட்டனர். சபையின் மெய்க்காப்பாளர்கள் வந்து திரு.வைகுந்தவாசனை வெளியே அழைத்துச் செல்லும் வரை சபையில் மயான அமைதியே நிலவியது. (தொடர்ச்சி பக்கம் 38)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைகுந்தவாசனின் துணிகரச் செயல்கள்

ஐ.தி.சம்பந்தன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வையகம் போற்ற வாழ்ந்த வைகுந்தவாசன் அவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவு அவர் வாழ்க்கையில் ஓர் பூரண விழாவாகும். எண்பது ஆண்டுகள் வாழ்ந்த இப் பெருமனிதன் வாழ்நாளில் சாதித்தவை என்ன என்பதை மதிப்பீடு செய்யும்போது அவரது பூரண வாழ்வு புலனாகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பல்துறைப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இவர் வரலாற்றுச் சாதனைகள் புரிந்துள்ளார். அதனால் தமிழ் இனத்துக்குப் பெருமை ஏற்படுத்திக் கொடுத்தார். அவரது சேவைகளை இம்மலரில் பலர் எழுதியிருப்பதனால் அவருடன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதாகும்.

"யார் இந்த வைகுந்தவாசன்" என ஏற்கனவே வெளியிட்டுள்ள எனது சிறு வெளியீட்டில் இடம்பெறாத சிலவற்றை இங்கு நினைவு கூருகின்றேன்.

1981ம் ஆண்டு தமிழ்நாடு தஞ்சாவூர் கோவிலில் நடைபெற்ற தமிழீழப்பிரகடனம் நேரில் கண்ட சம்பவம். இதில் திரு. ஈழவேந்தன், அமெரிக்காவில் இருந்து வந்த ஸ்ரீதரன் மற்றும் பலருடன் நானும் பங்கு பற்றினேன். இலண்டனில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவில் மேற்கொண்ட தீர்மானத்தை பல எதிர்ப்புக் கண்டனங்கள் மத்தியில் துணிகரமாக மேற்கொண்டவர் திரு. வைகுந்தவாசன். எடுத்த கருமத்தை முடிக்கும் ஆற்றலுக்கு ஓர் உதாரணம். அன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு இப்பிரகடனத்தை வரவேற்கவில்லை என்றாலும் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் (1981) "திரு. வைகுந்தவாசனின் தேசப்பற்றையும், அவரது துணிகரப் பணிகளையும் நாம் கௌரவிக்கின்றோம்" எனக் குறிப்பிட்டிருந்தது.'

இவ்வாண்டு செப்ரெம்பரில் டென்மார்க் நகரில் நடைபெற்ற உலகச் சமாதான மகாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து நீதிபதி மோகன் தலைமையில் பேராளராகப் பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 1951ல் இலங்கைத் தமிழர் திரு. நவரத்தினம் என்பவர் உருவாக்கிய உலகச் சமாதானம் என்ற அமைப்பு 1985ல் இந்தியாவில் புரனமைப்பு செய்யப்பட்டு, அதன் செயலாளராக 4000 பேராளர்கள் பங்கு கொண்ட உலக மகாநாட்டில் "Peace & Liberation" என்ற தலைப்பில் உரையாற்றினேன். அதில் இலங்கையில் சிங்கள அரசு தமிழருக்கு இழைக்கும் கொடுமைகளை விரிவாகக் குறிப்பிட்டேன்.

இலங்கையிலிருந்து வந்த பேராளர்களுக்கு தலைமை தாங்கி வந்த அமைச்சர் ஜய பத்திரன எனது பேச்சை வன்மையாகக் கண்டித்து நான் குறிப்பிட்ட கருத்துக்களை மறுதலித்து குழறுபடியை உருவாக்கினார். அந்த முக்கிய கட்டத்தில் எங்கோ ஒரு இடத்தில் அமர்ந்திருந்த திரு. வைகுந்தவாசன் புலி போல் பாய்ந்து வந்து எனது பேச்சு சரியானது என்று வாதாடி அந்த மகாநாட்டை ஒரு கலக்கு கலக்கினார். அவர் பேச்சின் பின் ஜய பத்திரன அடங்கிவிட்டார். அங்கு பங்குபற்றிய பலஸ்தீன விடுதலை இயக்கம், மற்றும் பல நாடுகள் எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன. திரு. வைகுந்தவாசனின் துணிவுக்கும், ஆற்றலுக்கும், தமிழ் உணர்வுக்கும் நான் நேரில் கண்ட மற்றுமோர் உதாரணம் இது.

இலங்கையில் இடதுசாரித் தொழிற்சங்க வளர்ச்சிக்கு 1947 லிருந்து முதுகெலும்பாக உழைத்த திரு. வைகுந்தவாசனின் பெருமையையும், திறமையையும் தொழிற்சங்க வாதிகளான வாசுதேவ நாணயக்காரா, எல்.டபிள்யு பண்டித, பாலா தம்பு, பற்றி வீரக்கோன் போன்ற பலர் 1982ல் சுகததாச ஸ்ரேடியத்தில் நடைபெற்ற தொழிற் சங்க மகாநாட்டில் வியந்து பேசியதை நேரில் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை அடைந்தேன்.

தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக நான் பணியாற்றியபோது இலங்கையிலுள்ள அனைத்துத் தொழிற் சங்கங்களின் கூட்டு மகாநாட்டில் தமிழ் தொழிற் சங்கங்களின் சார்பில் 50 பேராளர்களுடன் பங்கு பற்றி எமது தமிழ் ஊழியர்களின் அவலங்களை எடுத்துக் கூறியதன் பின்னர் சிங்களத் தொழிற் சங்கத் தலைவர்கள் என்னைச் சந்தித்தபோது திரு. வைகுந்தவாசன், திரு. கே.சி.நித்தியானந்தன் போன்றவர்களின் தொழிற்சங்க திறமைகளை நினைவூட்டினார்கள். 1947லிருந்து இன்று வரை மிகத் துணிகரமான தமிழனாக பல வீரச் செயல்கள் புரிந்தார் என்பதற்கு அனுபவ ரீதியாகக் கண்டவற்றை இங்கு குறிப்பிட்டுள்ளேன்

பெரியார் வைகுந்தவாசன் திருமதி. மகேஸ்வரி வைகுந்தவாசன் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ் இனத்துக்குப் பணிபுரிய வாழ்த்துகின்றோம்.

---

## *சோர்விலன் அஞ்சான்*

*சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகழ் வெல்லல் யார்க்கும் அரிது.*

*என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இலக்கணமாக அஞ்சாமையில் வான்புகழ் கொண்ட ஈழத் தலைவராக விளங்குபவர் உயர்திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன். அளவையூர் இவ் அவனிக்குத் தந்த அரும்புதல்வன். கல்வியிலும், கலைஞான அறிவிலும், பக்தியிலும் சிறந்து விளங்கும் இப்பண்புடையாரின் பணிகளை வாழ்த்தும் பொருட்டு அகவை 80 நிறைவை அறிஞர் கூட்டம் கொண்டாடி மகிழ இருப்பது அறிந்து அகமகிழ்கின்றேன். இறையருளாலும், அன்பர்களின் நல்லாசியினாலும் மேலும் பல்லாண்டு பல்லாண்டு அப் பெரியார் சிறப்புடன் வாழ பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.*

*அன்புடன்*

*ஆறு திருமுருகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கட்டுரையாளர் சிங்கராசா ஜோர்ஜ் ஒரு வளரும் எழுத்தாளர். எழுத்தார்வமிக்கவர். திரு.வைகுந்தவாசன் அவர்களின் வீட்டுக்குச்சென்று பேட்டி கண்டதுடன் புகைப்படங்களையும் எடுத்துத்தந்து மலரின் சிறப்புக்கு உதவியவர்.**

# நான் படித்த வரலாறு


*ந.சி.ஜோர்ஜ்*

இலண்டன் கொலியேஸ்வூட் பகுதியின் ஒதுக்குப்புறமாக வாறென் தெருவில் இலக்கம் 55ல் அமைந்திருக்கிறது திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களின் வீடு. ஒரு கலைக்கூடமாய் இருக்கிறது அந்த இல்லம். அங்கு சீனா, சோவியத் யூனியன் திசைகளிற்கெல்லாம் சென்று சேமித்து வைத்திருக்கும் படங்கள், அவரின் ஒரே குழந்தை வரைந்த ஓவியங்கள், புத்தகங்கள்.

ஒரு நூல் அகமாய்த் தெரிந்த நல்ல மனிதரிடம் பேசக் கிடைத்தது எனக்குப் பெருமிதம் தந்தது. கலைப் புகழ் பெற்ற அளவெட்டியும், வளம்மிக்க காரைநகரும் பெருமை கொண்டாடும் பெற்றோருக்குப் பிறந்த கிருஷ்ணா வைகுந்தவாசன் தந்தையாரை ஐயா என்றே அழைத்துப் பழக்கம். அந்தக் காலத்தில் வைகுந்தவாசனின் தந்தையார் மலேசியா அரசில் லிகிதராக வேலை பார்த்தவர். அவருக்கு இசையின் மீது ஈடு இணையில்லாப் பிரியம். அவரே பாடல்கள் இயற்றி, ராகமமைத்து பரமசிவனுக்குப் பாடிப் பரவசமடைந்திருக்கிறார். தாயாரான லக்சுமிப் பிள்ளைக்கும் இசையின் மீது ஈடுபாடு இருந்திருக்கிறது.

1920 இல் பிறந்த வைகுந்தவாசன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர். அக் கல்லூரிப் படிப்பே அரசு உத்தியோகத்துக்கு அவரை அழைத்து வந்தது. இலங்கை அரசில் பொது லிகிதராக இணைந்து அரசாங்க ஊழியர்களின் நலனுக்காக குரல் கொடுக்கத் தொடங்கினார் வைகுந்தவாசன் அவர்கள். அவரது உரிமைக் குரலில் ஓங்கிய சத்தம் அவரை அரசாங்க தொழிற் சங்கப் பொதுச் செயலாளராக ஆக்கியது.

பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காலத்துக்குக் காலம் பழிவாங்கத் தொடங்கின. பின்னர் 'மக்கள் குரல்' என்ற ஆங்கில வாரந்தரியை தொடக்கி நடாத்தினார். இது இலங்கையில் அந்த நேரத்தில் 6000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியது. பின்னர் வைகுந்தவாசன் இங்கிலாந்துக்கு வந்தார். 1956இல் இங்கிலாந்துக்கு வந்தவரை கடுங்குளிர் தாக்கியதால் நோய் வாய்ப்பட்டு இலங்கை திரும்ப வேண்டியதாயிற்று. அந்நேரம் இலங்கை அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. டாக்டர் என்.எம்.பெரேரா நிதியமைச்சராகப் பதவி ஏற்றிருந்தார். முன்னைய அரசாங்கத்தால் ப்தவி பறிக்கப்பட்டவர்களுக்கு மறுபடி அவர்களுடைய கடமைகள் வழங்கப்பட்டன. திரு.வைகுந்தவாசனுக்கும் பதவி கிடைத்தது. இலங்கையில் சிறிது காலம் கடமையாற்றிய வைகுந்தவாசன் இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட பத்துவருஷம் சேவை செய்வதற்கான ஓய்வூதியச் சலுகைகள் போன்றவற்றால் பலன் பெற முடிந்தது. வழக்கறிஞராகவும் தனது படிப்பை அக்கால கட்டத்தில் அவர் படித்து முடித்திருந்தார். இந்நிலையில் ஸாம்பியா அரசில் மாவட்ட நீதிபதி வெற்றிடம் இருப்பதாக வந்த தகவலைத் தொடர்ந்து அவ் வேலைக்கு



(தொடர்ச்சி பக்கம் 36)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுந்த
# வாசனாரை
# வாழ்த்துவோமே!

அகவை எண்பதில் அடியெடுத்து வைக்கின்ற ஐயா வைகுந்த வாசன் அவர்களுடன் சிறிது காலம் சேர்ந்து செயற்பட்டவன் என்ற வகையிலே அவரைப் பற்றி சில வரிகள் எழுதிட விழைகிறேன்.

நான் சிறுவனாக இருக்கும் பொழுது இவரைப் பற்றி முதல் முதலில் அறிந்து கொண்டது தமிழீழத் தந்தை செல்வநாயகம் அவர்களை எதிர்த்துப் பொதுவுடமைக் கட்சியில் அறுபதில் நடைபெற்ற தேர்தலில் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்ட போது தான்.

அப்பொழுதே அவருடைய துணிவை எண்ணி நான் வியந்தேன். ஒரு பெரிய மலையுடன் மோதிடக் கூடிய துணிவு அவரிடம் இருந்தது. தேர்தல் முடிவு எப்படியாக இருப்பினும் தனது கொள்கைப் பிடிப்பின் காரணமாக தந்தையை எதிர்க்கத் துணிந்தார். பின்னர் அதே துணிவு தான் 1997 மே மாதம் ஐக்கிய இராச்சியத்திலேயே இடம் பெற்ற தேர்தலில் வெற்றி தோல்வியைப் பற்றி சிந்தியாது சுயேட்சை அபேட்சகராக லண்டனில் பல பெரிய கட்சிகளை எதிர்த்துப் போட்டியிட வைத்த நிகழ்வாகும்.

எழுபதுகளின் கடைசிப் பகுதியில் தன்னைத் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைத்து அதன் இலண்டன் கிளை அமைப்பாளராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே அவருடன் இணைந்து செயற்படுகின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்பொழுது தான் அவருடைய மனோ வைராக்கியத்தை நான் அறிந்து அதிசயப்பட்டேன். செய்கின்ற செயலிலே நம்பிக்கையும் அதனைத் திறனே செய்ய வேண்டும் என்ற வைராக்கியமும் அவரிடம் இருந்தது. சுருங்கச் சொல்லின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று நெறிகளையும் தன்னிடத்தே கொண்டு அதன் நெறி நின்று வாழ்ந்து வரும் அறிஞர் அவர்.

முதன் முதலாக தன்னந் தனியனாய் ஐ.நா.சபையிலே ஈழத் தமிழனின் இறையாண்மையை ஒலித்த பெருமை அவருக்கு மட்டுந் தான் உள்ளது. தமிழ் உலகம் இருக்கும் வரை அவரை இதற்காக உளமார வாழ்த்திக் கொண்டே இருக்கும்.

எண்பது வயதென்ற போதும் அவரது துணிவு, செயல், சிந்தனைகளெல்லாம் இருபது வயது இளைஞனின் வயதை ஒத்ததாகும். இன்றைய நாளில் நமது தமிழ் ஈழக் கொடியை ஐ.நா.சபையில் பறக்க விட வைப்பதற்கான வழிவகைகளைச் சமைப்பது தான் அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும். அதற்காக இன்று உயிர் தந்து போராடுகின்ற நமது இளம் காளையர்களுக்கும் கன்னியர்களுக்கும் எமது பேராதரவைக் கொடுப்பது தான் ஒவ்வொரு தமிழனுடைய கடமையாகும். அப்போது தான் நமது ஐயா வைகுந்த வாசனாரின் கனவு நனவாகும்.

*பொன்.சிவசுப்பிரமணியம்*

(செயலாளர் தமிழர் விடுதலைக் கூட்டணி, இலண்டன் கிளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு ஆசான் பார்வையில்....

இவரது சேவைகளுக்கெல்லாம்
மகுடம்வைப்பது போல அமைந்தது
உலக சபையில் இவர் எறிந்த எறிகணை.



# ஐ. நா. சபைக்குள் வைகுந்த எறிகணை

தமிழ் ஈழத்தின் கலை சிறந்த கிராமமாகிய அளவெட்டியில் பிறந்த திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் வளரும் பயிரை முளையிலே தெரியும் என்ற பழமொழிக்கமைய பள்ளிப் பருவத்திலேயே தலைசிறந்த மாணவனாக, துடிப்புள்ள விளையாட்டு வீரனாக விளங்கினார். யாழ் நகரில் மிகச்சிறந்த கல்விமானாக விளங்கிய ஹன்டி பேரின்பநாயகம் போன்றவர்களின்
அடியொற்றி தமது கல்வி மேம்பாட்டினை வளர்த்து புகழ்பூத்த பாரிஸ்டரானார்.

தனக்கென வாழாது தமிழ்ச்சமூகத்துக்கென தன்னை அர்ப்பணித்த இவர் பல்வேறு துறைகளிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தி முத்திரை பதிக்கத் தவறவில்லை. அரச எழுதுவினைஞர் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து இவர் ஆற்றிய பங்களிப்பு இன்றும் மறக்க முடியாத ஒன்றாக உள்ளது. அந்தக்காலத்து அரசாங்கங்களின் பயங்கரமான கெடுபிடிகளுக்குக்கூட அஞ்சாமல் ஊழியர்களின் கோரிக்கைகளை வேலைநிறுத்தம்போன்ற ஆயுதங்களினால் வென்றெடுத்து தொளிற்சங்க விடிவெள்ளியாக விளங்கினார்.

பேனாமுனை வாளினும் கூரியது என்ற கூற்றுக்கிணங்க மக்கள் குரல் என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையை நடத்தி அரசாங்கத்திற்குச் சவால் விட்ட துணிவாளர். தமது சீன, சோவியத் யூனியன் விஜயங்களை நூல்வடிவாக்கி நமது நாட்டவர்களுக்கும் பயன்பெற செய்தார்.

இலங்கையின் ஒருதலைப்பட்சமான சுதந்திரத்தில் தமிழ் மக்கள் பொருளாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவைகளில் பின்தள்ளப்பட்டதையும், அரசியலில் உரிமைகள் பறிக்கப்பட்டுவருவதையும் உலகத்தலைவர்களுக்கு எடுத்து விளக்கிய பெருந்தகை இவர். வெளிநாடுகளின் பலவேறு அமைப்புகளையும் அணுகி தமிழ் மக்களின் கஷ்டங்களையும் சிங்கள அரசுகளின் திட்டமிட்ட இன அழிப்பையும் அம்பலப்படுத்தினார்.

இத்துறையில் இவரது சேவைகளுக்கெல்லாம் மகுடம் வைப்பதுபோல அமைந்தது ஐக்கிய நாடுகள் சபையில் திடீரென இவர் எறிந்த எறிகணை. அது சிங்கள இனவாதிகளின் ஆதிக்கத்தால் ஈழ மக்களுக்கும் ஏனைய தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களை உலகறியச் செய்தது.


தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரப்பிய பெருமைக்குரியவர் என்று தனிநாயகம் அடிகளார் கூறியதுபோல பட்டி தொட்டி எல்லாம் ஈழத்தையும் .அதன்மூலம் தமிழையும், தொடர்ந்து தமிழர்களையும் நினைவுக்குக் கொண்டுவந்த சிந்தனைச் சிற்பியை நீடூளி வாழ நாமும் வாழ்த்துவோமாக.

சு.மகாலிங்கம்

இளைப்பாறிய மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லா இடத்திலும் எல்லோர் இடத்திலும் இறைவனைக் காண்


எல்லாஞ் சிவமே

அப்பனும் அம்மையும் சிவமே அரியசகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே ஓதரும் மைந்தருஞ் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி எல்லாஞ் சிவமே என்னையாண்டதுஞ் சிவமே

- நற்சிந்தனை

# தமிழர் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்தவர்

## மு. ஆறுமுகம்



முன்னை நாள் தலைவர், லண்டன் சிவதொண்டன் நிலையம்.

திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களும், நானும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சிலகாலம் ஒரே வகுப்பில் கல்வி பயின்றோம். இவரது திருமணத்தினால் இவர் எனக்கு நெருங்கிய உறவினர் ஆனார். அரசாங்க லிகிதர் சேவையில் இருவரும் சேர்ந்தோம்.

இவர் அரசாங்க லிகிதர் சேவையில் இருந்து சிறந்த தொழிற்சங்க வாதியாக இடதுசாரி முன்னணித் தலைவர்களுடன் சேர்ந்து செயல்பட்டார். அரசாங்கத்திற்கு எதிரான இவரது தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக அரசாங்க சேவையில் இருந்து விலக்கப்பட்ட பெருமை இவருக்கு கிடைத்தது.

அரசாங்க சேவையில் இருந்து விலக்கப்பட்ட பின் இங்கிலாந்து சென்று பட்டம் பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்று ஆப்பிரிக்காவில் சாம்பியா நாட்டில் நீதிபதியாகிப் புகழ் பெற்றார்.

1978ம் ஆண்டு நியூயார்க் நகரத்தில் ஐக்கிய உலக நாடுகள் (U.N.O) மகாநாட்டுக் கூட்டம் நடைபெறும் போது துணிவுடன் மேடை ஏறி இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனையை உலகத்தலைவர்களுக்கு எடுத்துக் கூறி வீரமுழக்கம் செய்து தீரச் செயல் புரிந்த வீரன் இவர். சரித்திரம் படைத்தவர். இந்தியா, சீனா, ருசியா, ஜெர்மனி போன்ற பல உலகநாடுகள் பிரயாணம் செய்தவர். தான் வெளியிட்ட பத்திரிகைகளினாலும் புத்தகங்களினாலும் தனது பேச்சு வன்மையினாலும் பல உலகத்தலைவர்களது மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்றவர். எப்பொழுதும் தமிழர் நல்வாழ்விற்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வந்த பெரியார். இவரது 80வயது பூர்த்தி விழாவில் பங்கு பெறுவதில் மிகவும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறேன்.

வாழ்நாளில் இன்னும் பல தமிழ் தொண்டிற்கும் ஆன்மீகவாழ்விற்கும் இறைவன் இவருக்கு நல்ல தேக ஆரோக்கியமும் பூரண ஆயுளும் அருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

மு. ஆறுமுகம்

இளைப்பாறிய பொலிஸ் திணைக்கள பிரதம கணக்காளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயல் வீரர் திரு.வைகுந்தவாசன்

திரு.வைகுந்தவாசன் அவர்கள் மிகவும் நல்லவர். எனக்கு நன்கு அறிமுகமானவர். தனது அசாத்திய துணிச்சல் மிக்க செயலினால் தமிழ் மக்கள் எல்லோரினதும் நினைவிலும் தன் பெயரை நிலைநிறுத்திக் கொண்டவர். "தமிழ் ஈழம்" என்னும் பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் அவர் பெயரை கூடவே உச்சரிக்கும் நிலையை உருவாக்கிய ஒரு துணிச்சலான மனிதர்.

கள்ளங் கபடமற்ற உள்ளம். எல்லோரிடமும் பண்பாகப் பழகும் பண்பு, சாதாரண மனிதனாகத் தன்னை இனங்காட்டிக் கொள்ளும் உயர்பாங்கு, எதையாவது செய்யவேண்டும் என்கிற ஆதங்கம், தன் இனத்துக்கும் மொழிக்கும் இறுதிவரை பணி புரிந்திட வேண்டும் என்ற ஆர்வம் -இத்தனை நற்பண்புகளையும் தனக்கே கொண்டு இந்த தள்ளாடும் வயதிலும் "தன் கடன் பணி செய்வதே" என்ற குறிக்கோளுடன் வாழ்ந்து வருபவர்.

அரச ஊழியனாக, தொழிற் சங்கவாதியாக, எழுத்தாளனாக, பத்திரிகையாளனாக, பேச்சாளனாக, சட்டத்தரணியாக, நூலாசிரியனாக, நீதிபதியாக பல்வேறு துறைகளிலும் தன் திறமையை வெளிப்படுத்தி தனக்கென முத்திரையைப் பதித்துக் கொண்டவர்.

குழந்தையுள்ளம் கொண்டவரானாலும் அநீதியைக் கண்டால் அதை அழித்திட சிங்கமாய் சிலிர்த்து எழுபவர். தமிழினத்தின் விடிவிற்கும், சுதந்திர வாழ்வுக்கும் தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டு தமிழின விடுதலைப் போராட்டத்தில் தன் பங்களிப்பை தவறாமல் இன்றுவரை செய்து வருபவர். இலங்கை, இந்தியப் பிரமுகர்களுக்கும் தலைவர்களுக்கும் மிகவும் பரிச்சயமானவர்.

எந்தவொரு விடயத்திலும் தனது மனதுக்குச் சரியெனப்பட்டதை உரத்துச் சொல்ல சிறிதேனும் தயங்காத இந்த மனிதர் தன் கருத்தில் தவறு உண்டென உணர்ந்தால்அதை ஏற்று தன் கருத்தை மாற்றி தவறுக்கு வருத்தம் தெரிவிக்க என்றும் தயங்காதவர்.

தொழிற் சங்கவாதியாக, அரசியல்வாதியாக, பத்திரிகையாளனாக மட்டுமல்ல பல நல்ல புத்தகங்களின் ஆசிரியனாகவும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யமானவர். எல்லோரையும் நண்பர்களாக எண்ணிப் பழகும் இவரை தமிழினத் துரோகிகளும், கூலிக் குழுக்களின் தலைவர்களும் கூடத் தங்களின் சுயநலத்துக்குப் பயன்படுத்த முயற்சித்ததுமுண்டு.

பல சகாப்தங்களாக நலிந்துபட்ட மக்களுக்காக பணியாற்றி வந்த நல்ல மனிதர் இன்று தமிழ் ஈழ சுதந்திர தாகத்தை தன் மூச்சாகக் கொண்டு செயலாற்றி வருகின்றார். அவரின் கனவுகள் நனவாக வேண்டும். அவர் நீண்ட நெடுங்காலம் தேக நலத்துடன் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. செல்வநாயகம்
(சட்டத்தரணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ. நா. பேச்சு அரிய சாதனை

நற்றமிழ்க் காவலர், தமிழ் மணி அரங்க முருகையன்,
உலகத் தமிழ்க்கழகம், இலண்டன்.

ஆயிரம் பிறை கண்ட அரிய சாதனையாளர் திரு. கிருஷ்ணா (ஐ. நா) வைகுந்தவாசன் அவர்கள் நீடூழி வாழ்க!

1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்தாம் நாள் வியாழக்கிழமை தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள்.

ஐ.நா. என்று நாம் வழக்கமாகக் குறிப்பிடும் ஐக்கிய நாட்டுப் பொது மன்றத்தில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் பேசவிருந்த நேரத்தைப் பயன்படுத்தி, அமைச்சர் பேச வருவதற்கு முன்னரே திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் எழுந்து சென்று இலங்கை நாட்டுச் சிங்கள அரசு வேண்டுமென்றே திட்டமிட்டுத் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதை எல்லோரும் அறியும் வண்ணம் ஆங்கிலத்தில் பாங்குற எடுத்துரைத்து முழங்கினார்.

திரு. கிருஷ்ணா வைகுந்தவாசனின் துணிவான அச்செயல் ஓர் அரிய சாதனை. வேறு சில நாடுகளில் வாழ்வோருக்கும் இத்தகைய குறைகள், தொல்லைகள் ஏற்பட்டிருக்கும் என்றாலும் அவர்கள் எல்லோரும் தங்கள் குறைகளை மறியல் செய்தும், ஆர்ப்பாட்டம் மூலமாகவும் தெரிவித்தார்களே ஒழிய, எவரும் ஐக்கிய நாட்டுப் பொது மன்றத்தின் வழி வெளிப்படுத்த நினைத்துப் பார்த்தது கூட இல்லை. செய்வன திருந்தச் செய் என்ற நம் தமிழ்ப் பழமொழிக்கிணங்கக் குறை தெரிவிக்க வேண்டிய இடத்தில் முறையாகக் குறையை எடுத்தியம்பிய பெருமை திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களையே சாரும்.

திரு கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள் ஐ. நா. பொதுமன்றத்தில் சிறீலங்கா அரசு தமிழ் இன மக்களையே முற்றாக அழிப்பதன் மூலம் எங்கள் தமிழ் ஈழ நாட்டையே அழிப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது....என்று முழங்கியதை இலங்கைப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்தபோதிலும் உலகின் பல பாகங்களிலும் வெளிவரும் பத்திரிகைகள் அப்பேச்சை வெளியிட்டு உண்மையை உலகறியச் செய்தமை குறிப்பிடத்தக்கது. உண்மைக்கு அழிவும் இல்லை- உண்மையை எப்படித்தான் மறைக்க முயன்றாலும் உண்மை வெளிப்பட்டே தீருமல்லவா?

அவர்தம் சீரிய அருஞ்செயலைப் பாராட்டு முகத்தான் 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலண்டன் ஈஸ்ட்ஹாமில் தமிழர் முன்னேற்றக்கழகத்தார் கொண்டாடிய பொங்கல் விழாவின் போது திரு. கிருஷ்ணா வைகுந்தவாசனை சிறப்பு விருந்தினராக அழைத்து அவர்தம் இணையற்ற செயலைப் பாராட்டி, அவருக்கு ஐ-தலைவன் நா-நாவன்மை மிக்கவர் என்ற பொருள் கொண்ட ஐ.நா. என்ற சிறப்பு விருதினைச்சூட்டி மகிழ்ந்தனர். அவரது பாராட்டுக்குரிய செயல் குறித்து நூல்கள் பலவும் எழுதப்பட்டன.

தமிழ் நாட்டிலும் வேறு பல உலக நாடுகளிலும் தமிழரே மட்டுமன்றி வேறு பல இனத்தவரும் சாதனையாளர் திரு.கிருஷ்ணா வைகுந்தவாசனைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

மூவர் விழாவில் பாராட்டு

1988 ஆம் ஆண்டில் இலண்டன் மாநகரின் தென்மேற்குப் பகுதியான டூட்டிங்கில் நாவலர் க. நவசோதி அவர்களது ஏற்பாட்டில் நிகழ்வுற்ற மூவர் விழாவில் திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களின் பாராட்டுக்குரிய நற்செயல் நினைவு கூறப்பட்டுப் பரிசில் வழங்கியும், கீழ்க்காணும் வாழ்த்துப்பா படித்தும் தரப்பட்டன.

ஐ.நா. மன்றத்தில் அன்றுநீர் முழங்கினீர்
ஐயா. வைகுந்த வாசரே! எம் தலை
தாழ்த்தி வணங்கி நீர் நெடுநாள் வாழ்ந்திட
வாழ்த்தி மகிழ்ந்தோம் வியந்து.

ஆயிரம் பிறை கண்ட சாதனையாளர் திரு. ஐ. நா. வைகுந்தவாசன் நலமே நீடு வாழ வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமையில் ....




'மக்கள் குரல்' பத்திரிகையுடன்...



சூப்பர் ஸ்டார் ரஜனிகாந், முத்துராமன் மற்றும் கலைஞர்களுடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் பிரதம
நீதியரசராக இருந்த
திரு. T.S.
பெர்ணான்டோவுடன்



மலேசியாவின்
முதலாவது
பிரதமராக இருந்த
துங்கு அப்துல்
ரஹ்மானுடன்...



சென்னையில்
டாக்டர் பஞ்சாட்சரம்
அவர்கட்கு நடந்த
வரவேற்பில்
சுதா வெங்கட்ராமன்,
எம்.எல்.
வசந்தகுமாரியுடன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகள் இரண்டு சாதித்தவர் ஒருவர்

**பாலா**

மற்றவர்கள் சாதிக்க முடியாது என்று தயங்குவதையும், இனிச் சாதிக்கமுடியாதென்று கைவிடுவதையும் தானே சாதித்துக் காட்டும் திறமையின் சின்னம் தான் திரு. கிஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள்.

இவரது முக்கியமான சாதனைகளில் இரண்டைப் பற்றி குறிப்பிடுவதே எனது நோக்கம்.

**சாதனை-1**

ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் ஈழத்தைப் பற்றியும், தமிழீழ மக்களின் பிரச்சனை பற்றியும் திடீரெனப் பிரவேசித்துப் பேசியது . அது பற்றிக் கட்டுரையாளர்கள் பலபேரும் குறிப்பிட்டுள்ளார்கள். இச்சாதனைக்கு இணையானது வேறொன்று இல்லை எனலாம். உலகமே வியக்கும் வகையில் ஐ.நா சபையில் புகுந்து தமிழீழத்தை உலகளாவச் செய்துவிட்ட பெருமை இவரையே சாரும்.

**சாதனை-2**

ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P) பேச்சு, எழுத்து, பத்திரிகைச் சுதந்திரங்கள் மீது போட்டிருந்த இரும்புத்திரையைக் கிழித்து விட்டது. சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி ஆகியவைகளில் பிரபல்யம் வாய்ந்த தலைவர்கள் இருந்தும் சாதிக்க முடியாமல் போனதை தொழிற்சங்கவாதியாக இருந்த இவர் சாதித்து மற்றவர்களுக்கு முன்னோடியாக இருந்தது.

அரசாங்கக் கெடுபிடிகளையும், பொலிசாரின் வலைவீச்சையும் மீறி "மக்கள் குரல்" என்ற ஆங்கிலப் பத்திரிகையை வெளியிட்டது பெரும் சாதனையாகும்.

ஐக்கியமும், தேசியமும் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சி தொழிற்சங்கங்கள் மீதும், இடதுசாரிக்கட்சிகள் மீதும் பழிவாங்கிக் கொண்டிருந்த காலம். 1947ம் ஆண்டில் நடைபெற்ற அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தத்தில் தியாகி கந்தசாமி பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்றே இதற்கு உதாரணமாகும்.

சேர். ஓலிவர் குணதிலக, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஜோன் கொத்தலாவை . போன்ற பெரிய தலைவர்களின் அடக்குமுறை, தலைவிரித்தாடிய நேரத்தில் இடதுசாரிப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கும் துணிவு திரு. வைகுந்தவாசனுக்கு மட்டும் தான் இருந்ததென்றால் அவரது துணிவு தான் அதற்குக் காரணம் எனலாம்.

இவருடைய "மக்கள் குரல்" பத்திரிகை பெரும் பரபரப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியது. அரசாங்கத்தைப் பணிய வைத்த பெருமைக்குரியவர் என்று இடதுசாரிகள் பகிரங்கமாகப் பாராட்டினார்கள்.

"மக்கள் குரல்" புதிய சகாப்தத்தை ஏற்படுத்திக் கொடுத்ததைத் தொடர்ந்து தான் அதே அச்சகத்திலிருந்து திருமதி. தேஜா குணவர்தனா என்பவர் "றைன்" என்ற வாரப் பத்திரிகையை வெளியிட்டார். பணவசதியும், குடும்பச் செல்வாக்கும் உள்ள திருமதி. குணவர்த்தனாவை பத்திரிகை உலகில் பிரவேசிக்க வைத்ததும் இந்த "மக்கள் குரல" தான். அத்துடன் இடதுசாரிப் போக்குடைய பத்திரிகைகள் நின்று விடவில்லை. இதே அச்சகத்தை எனது நண்பர் சட்டத்தரணி எஸ். பி. அமரசிங்கம் வாங்கி "ட்ரிபியூன்" என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டார். பின்னர் இப்பத்திரிகை மிகவும் பிரபல்யமானதாக இருந்தது. (தொடர்ச்சி 35ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்புத் தலைவர் வாழ்த்து

மெலனியம் புத்தாண்டில் தமது 80வது பிறந்த தினத்தை கொண்டாடும் உலகப் புகழ் பெற்ற தமிழ்ப் பெரியார் திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன் எமது அமைப்பின் நீண்டகால அங்கத்தவர் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன். அவரது பிறந்த தினத்தில் தென் இலண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பின் சார்பில் அவரைப் பாராட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. வைகுந்தவாசன் அவர்கள் ஒரு சிறந்த சட்டத்தரணியாகவும், நீதிபதியாகவும், பத்திரிகை ஆசிரியராகவும் கடமையாற்றித் தமிழருக்கு அழியாப்புகழையும் பெருமையையும் தேடித் தந்தவர் என்பது உள்ளங்கள் தோறும் உவகை தருவதாகும். அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் பல அவரது நாவன்மையை எடுத்துக் காட்டுவதுடன் அவரது ஆணித்தரமான தமிழ்ப் பற்றையும் உலகுக்கு வெளிப்படுத்துகின்றன என்றால் அது மிகையாகாது.

இவர் எக்காரியத்தையும் துணிவுடன் ஆற்றும் வீரம் கொண்டவர் என்பதை தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருக்கக்கூடிய சாதனைகளில் ஒன்றாக அதிசயமான முறையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அதன் சட்டதிட்டங்கள் கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் கடந்து புத்திசாலித்தனமாக நுழைந்து அனுமதியின்றிப் பேசியமை குறிப்பிடத்தக்கதாகும்.

வீரத் தமிழன் வைகுந்தவாசன் ஐயா அவர்களுக்கு எமது உள்ளங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்துக்களை தென் இலண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பின் சார்பில் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் தாம் மேற்கொண்ட தமிழ்ப் பணியை தொடர்ந்து ஆற்றிட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

*திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ்*

தலைவர்.

---

**சாதனைகள் இரண்டு....**

இப்படி அரசாங்கங்களை பகிரங்கமாக எதிர்க்கக்கூடிய ஒரு சக்தியை இலங்கையில் ஏற்படுத்திய பெருமை திரு. வைகுந்தவாசனையே சாரும்.

இவருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு சுமார் 40 வருடம் பழமையானதெனலாம். ஒரு சமயத்தில் நாங்கள் இருவரும் குரல் கொடுத்தால் கேட்கும் தொலைவிலுள்ள வீடுகளில் வாழ்ந்து வந்தோம். மீன்பிடி இலாகாவில் கணக்காளராக இருந்த நல்லூராரைச் சேர்ந்த செல்லத்துரை என்பருடைய வீட்டின் ஒரு பகுதியில் திரு. வைகுந்தவாசன் துணைவியார் மகேஸ்வரியுடன் வசித்து வந்தவர். இக்கால கட்டத்தில் கம்யூஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன் சம்பந்தமாக எனக்கும் திரு. வைகுந்தவாசனுக்கும் இடையில் அரசியல் வேறுபாடு மோதல் ஏற்பட்டதும் ஞாபகம். ஆனால் அவர் அன்பும் பண்பும் சாமர்த்தியமும் எங்கள் தொடர்பை வளர்த்து வந்ததெனலாம்.

திரு. வைகுந்தவாசன் பெருமை பற்றி எழுதுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன் ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியக் குரல்....

## பேச்சிலும் ஈழத்தமிழர் மூச்சிலும் ஈழத்தமிழர்

சிவத்திரு கிருஷ்ணா வைகுந்த வாசன் அவர்களது முத்து விழா ஏப்ரல் 29ம் திகதி 2000 காண இருக்கும் அவர்களுக்கு ஆசியையும், வாழ்த்துக்களையும் அனுப்பி வைப்பதில் மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐயா அவர்கள் மலேசியத்திருநாட்டின் கோலாலம்பூர் தலைநகருக்குப் பல தடவை வந்துள்ளார்கள். அவர்களைக் கண்டு பலமுறை உரையாடும் பாக்கியம் பெற்றேன்.

இரண்டு வருடங்களுக்கு முன் கோலாலம்பூர் வந்திருந்த போது ஐயா அவர்களைச் சென்று கண்டேன். அப்போது உடல் நலம் குறைவாக இருந்த போதிலும் அவர்கள் ஈழத்தமிழர் பிரச்னையைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தொழிற்சங்கவாதியாக, அரசியல்வாதியாக, சட்டத்தரணியாக, நீதிபதியாக, பத்திரிகை ஆசிரியராக, தமிழ் ஈழத்தை உலக அரங்கில் வைத்த வீரத்தமிழனாக பல்துறை பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி வீரத்தமிழனாக இலண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருக்கக்கூடிய வரலாற்றுச் சம்பவங்களில் ஒன்று ஐக்கிய நாடுகள் சபைக்குள் நுழைந்து ஈழத்தமிழர் பிரச்னையை உலக அரங்கில் ஒலிக்கச் செய்த வீரச் செயல், உலக ரீதியான பாராட்டும் புகழும் இவருக்கு இதில் கிடைத்துள்ளன.

பெரியார் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*A. Kulaveerasingam*
No: 9 Lengtongam Vethavanam
51100 Kulal Lumbur
Malaysia.

---

**நான் படித்த ....**

விண்ணப்பித்து மாவட்ட நீதிபதியாய் அங்கு சென்றார் . ஸாம்பியாவில் கடமையாற்றிய மாவட்ட நீதிபதிகளில் முதல் ஆசியரும், முதல் தமிழரும் திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள் தான். தன் ஒரே மகனின் படிப்பிற்காகவும் அவரது நல் வாழ்வுக்காகவும் 1977ம் ஆண்டு திரு.வைகுந்தவாசன் மறுபடி இங்கிலாந்து வந்தார். அதற்குப் பின்னர் நடந்தவை சரித்திர சம்பவங்கள். இந்த மடலில் ஒவ்வொரு பக்கங்களிலும் அவற்றைப் பலர் எழுதியிருக்கிறார்கள்.

நின்று விடாது காலமென்னும் நதி ஓடிக் கொண்டேயிருக்கிறது. அதில் கரைந்து விடாது நிமிர்ந்து நிற்கிறது வைகுந்தவாசன் என்னும் கடல். தன் வாழ்க்கை வரலாற்றால் திரு.வைகுந்தவாசன் அவர்கள் எனக்கு கலங்கரை விளக்காகத் தான் தெரிகின்றார். இந்த விளக்கின் வெளிச்சம் இளைஞர்களுக்கு புதிய ஆற்றல் தர வேண்டுமென்ற நம்பிக்கையோடு விடைபெற்றேன். இனிக் காலம் நம்மை விடுதலை செய்யும் என்ற கனவு எனக்குள் உயிர்ப்புப் பெறுகிறது.

வெல்வோம்! வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய வைகுந்தவாசா வாழியவே!

நீள்பரவை சூழ்ந்திடும் நிலமது ஈழமண்ணில்
வாழ்வது தமக்கென வாழ்ந்திடா வாகை சூடி
நூல் பல கற்றுதன் நுண்ணறிவைப் பெற்று
பார் புகழ் மேவிடும் பாவலன் வைகுந்தா!-நின்
பால் கொண்ட அன்பினால் உனக்கொரு விழாவினைத்-திரு
மால் தங்கை மகமாயி அரங்கினில் கொண்டாட-தமிழ்
ஆண் டொன்றில் ஆன்றோர்கள் வழி சமைக்க
வாழ்த் தொன்று நான் வழங்க வாழிய நீர் வாழியவே!

பொய்யினைப் புடைசூழ் மாந்தர் வாழும்
வையகந் தனிலே வாழ் நெறி குன்றா
தையலுடனும் தக்க மகவொடும்
மெய்யறி வாலே யெண்பதைக் கடந்த
பைந்தமிழ் செல்வா ஐயனே!வைகுந்த வாசா -உன்னைச்
செந்தமிழாலே சிறு கவி சொல்லி
ஐங்கரன் துணையால வாழ்த்திட வந்தேன்
வாழிய நீர் வாழியவே!

வளம்பெறு நாட்டில் கலை பல பெற்றுத்-தமிழ்
நலம் பெற வேண்டி நாடுகள் சென்று
பலன் தரு மதியால் பலதினைக் கற்று
மலந்தனை யகற்றி வாழ்வினை யுயர்த்தித்-தமிழ்
குலமது ஓங்க குறையிலா சேவை செய்து
நலமுடன் கற்றவர் மனதில் வாழ்ந்து
புலமது பெயர்ந்து நித்திலம் போற்ற
வலம் வரும் ஐயனே! வைகுந்தவாசா வாழியவே! நீ வாழியவே!

கற்றதனால் பயன் கொண்டெம் தமிழை
மற்றவ ரறியச் செப்பிய மனமும்
முற்றிய நெறியும் முதிர்வுடைத் திறனும்
சற்றேனும் மாறாத் தனித் தமிழ் மறவும்
வெற்றி யென்னும் வேத வாக்கியமும்
உற்ற பொருளாய் உனக் கெனக் கொண்டு
இற்றை வரைக்கும் உன் புகழ் காத்து
எண்ப தகவை யெய்திய வடிவே வாழிய நீ வாழியவே!

ஐ.நா.சபையின் மெய்க்காப்பாளர்
அறியா வண்ணம் சபையினுள் புகுந்து
இலங்கைத் தூதர் எழுந்திடு முன்பு
இரண்டொரு வார்த்தை தமிழினம் பற்றி
முழங்கிய துணிவு எம் தமிழுக்கோர்
ஏற்றந் தானே இற்றை வரைக்கும்
ஈழ மண்ணின் அறிஞர்களுள்ளே
வித்தகராய் நீ என்றும் வாழிய நீ வாழியவே! ■



**வேலணையூர்**
**சிவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V.S.Gunaratnam.
Herbertstr.3
10827 Berlin
Germany.

## உலகத்தமிழர்

பேரன்புமிக்க பெரியார் கிருஷ்ணா வைகுந்தவாசன் ஐயா அவர்கட்கு,

29.04.2000ல் 80வது அகவை நிறைவு நடைபெறவிருப்பது பற்றி ஈழநாடு பத்திரிகை மூலம் அறிந்து கொண்டேன். இத்தினத்தையொட்டி எங்கள் இதயம் கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம் . தாங்கள் மேலும் நூற்றாண்டு காலம் சகல நலன்களும் பலமும் பெற்று நீடுழி வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற வேண்டுமென நல்லூர்க் கந்தனை வேண்டிக் கொள்கின்றோம். இலங்கைத் தமிழரின் நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் தாங்கள் ஆற்றியுள்ள ஆற்றிவந்த சேவைகள் என்றும் உலகத் தமிழர் வரலாற்றில் இடம் பெறும்.

இந்த வகையில் அரை நூற்றாண்டு காலமாக தங்களை நன்கு தெரிந்து கொண்ட என் போன்றோர் தங்களை வாழ்த்துவது தமிழையும் தமிழரையும் பெருமைப்படுத்தும் ஒன்றே.

இப்படிக்கு

தங்கள் அன்புள்ள
வெ.செ.குணரத்தினம்.

---

**அமெரிக்க.......**
இலங்கையிலிருந்து சென்ற அரசாங்கப் பிரதிநிதிக்கே திரு.வைகுந்தவாசனை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போனபோது ஐ.நா.சபையின் அதிகாரிகளுக்கு எப்படி அவரைத் தெரிந்திருக்க முடியும்? எல்லோருமே பேச்சு முடியும் வரையும் தமிழ் ஈழம் வாழ்க என்று சொல்லும் வரையும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பேச விடவில்லை ஒலிபெருக்கிக் கருவியைப் பிடுங்கி விட்டார்கள் என்ற பேச்சு, விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதைக்கு ஒப்பாகும்.

இந்த ஐ.நா.சபைப் பேச்சில் திரு வைகுந்தவாசனுக்கு அதிஷ்டம் இருந்தது. இவரைச் சபைக்குள் இருந்து வெளியேற்றிய அதிகாரிகள் பாதுகாப்புப் படையினரிடமோ, பொலிஸாரிடமோ ஒப்படைக்காமல் இனிமேல் சபைக்கு வருவது தடை செய்யப்பட்டுள்ளது என்று மட்டும் அறிவித்து அனுப்பி விட்டார்கள். பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தால் அமெரிக்கா தன்னை அவமதித்ததாகக் கருதி திரு.வைகுந்தவாசனுக்கு ஆயள்கால சிறைத்தண்டனை வழங்கி சிறைக்குள் தள்ளியிருக்கும்.

ஒரு நல்ல காரியத்தைச் செய்த ஒருவருக்கு நல்லதே நடக்கும் - நடந்தது என்று திருப்திப்படுவதே மேலானது.

(மொழிபெயர்ப்பு: பாலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRITISH
tamil
DIRECTORIES

52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, UK.
Tel : 020 8543 2126 / 020 8640 7230. Fax : 020 8540 3442.
Web: http://tamilpages.luxmi.com. E-Mail: tamilpages@luxmi.com

*Managing Editors: T.Srikantha Rajah & A.Gnanendran*

## ஈழத்தமிழருக்கு ஆற்றிய சேவை

திரு கிருஷ்ணா வைகுந்த வாசன் அவர்களை உலகில் வாழும் ஈழத்தமிழ் மக்களில் தெரியாதவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லலாம். இதற்குக்காரணம் அவர் ஈழத்தமிழருக்கு ஆற்றிய சேவை. அவரின் சேவையைக் குறிக்கும் பொழுது ஐ.நா சபையில் அவர் ஆற்றிய துணிச்சல் வாய்ந்த உரை தனித்துவம் பெறுகிறது. இன்று வரை ஈழத்தமிழர் ஒருவரும் அப்படித் துணிச்சலான செயல் ஒன்றைச் செய்யவில்லை.

பிரித்தானியாவில் தமிழ் மக்களின் பெருமதிப்பைப் பெற்ற தமிழ் ஓலைகள் நிறுவனமும் திரு. வைகுந்தவாசன் அவர்களின் 80வது வயது பூர்த்திவிழாவில் பங்குபற்றி அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

திரு. வைகுந்தவாசன் அவர்கள் நோயற்ற வாழ்வையும், நிறைந்த தேக ஆரோக்கியத்தையும் பெற்று நீண்ட காலம் வாழ இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

தமிழ் ஓலைகள் சார்பில்

தி.சிறீகந்தராஜா

---

உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா)**
2. Salisbury Road, Manorpark, London E12 6AB
Tel: 0181 550 2739/ 0181 5504233

## வாழிய நீர் இன்னும் பல்லாண்டு

எத்தனை இடஞ்சல்கள் வந்தும் தடைகள் வந்தும் எங்கள் அமிழ்தினும் இனிய தமிழ் கடல்கடந்து வாழ்வதற்குக் காரணம் திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் போன்ற பெரியவர்களின் உயரிய தமிழ்ப் பணி தான். இவரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்காது விட்டாலும் இவர் புரிந்த பல பணிகளைக் கேட்டு நான் வியந்திருக்கின்றேன். மூக்கில் விரல் வைத்து ஆச்சரியம் அடைந்திருக்கின்றேன்.


இத்தகு பெருமைவாய்ந்த பெரியவரின் எண்பதாவது பிறந்தநாள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் சைவ முன்னேற்றச் சங்கம் பெருமை கொள்கின்றது. பெரியவர் இன்னும் பல்லாண்டு தெம்புடன் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணி புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டிக் கொள்கின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க சைவம்!

திரு. வி. நாகரத்தினம்
தலைவர்
சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**SIVAYOGAM சிவயோகம்**
A Charity Registered in England & Wales. Registration No 1050398
**ஈழம் அநாதர், பதியிலர், கதியிலர் நிதியம்**
**FUND FOR THE EELAM ORPHANS, WIDOWS & DESTITUTES**
180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337



சாதனையாளர் வைகுந்தவாசன்

ஐக்கிய நாடுகள் சபையில் தமிழர் ஒருவர் தமிழ் ஈழநாட்டையும் ஈழத்தமிழரின் நியாயமான கோரிக்கைகளையும் நியாயப்படுத்திக் குரல் எழுப்பிய செய்தி வந்தபோது தமிழர் மனங்களில் தவழ்ந்த மகிழ்ச்சி மட்டற்றது. நாம் அன்று கொண்ட பெருமை இன்று நினைத்தாலும் இனிக்கின்றது. அது ஒரு மனித சாதனை!. வரலாற்றில் பதிவான சம்பவம்.

ஐக்கிய இராட்சியத்தில் (எண்பது வயது நிறைவு) முத்துவிழாக் கொண்டாடும் உயர்திரு. வைகுந்தவாசன் அம்பாள் அருளோடு தம் தசாப்த பூர்த்தியையும் கொண்டாடுபவராக, மலர்ந்த தமிழ் ஈழத்தை அவர் வாழ்நாளில் கண்டு மகிழ வேண்டும். இவருக்கு எடுக்கப்படும் விழா விடுதலைக்கான சாதனைகளைப் படைக்கப் பலர் விரைந்து முன் வரத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் அவரது சுக நல நீடு வாழ்வுக்கு அருளட்டும். சிவயோகத்தின் அறங்காவலர் சபை உறுப்பினர்கள், சிவாச்சாரியர்கள், நிர்வாக ஆலோசகர்கள் ஆகியோரின் சார்பில் அவர்களின் ஆசியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்

ஓம் சக்தி

நா.சீவரத்தினம்

தலைவர், அறங்காவலர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப நண்பர் ஒருவரின் மகிழ்ச்சி



80வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் ஐயா திரு. வைகுந்தவாசன் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். ஐயாவின் 80வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இவ் வேளையில் அவரின் மேல் நாம் கொண்ட மதிப்பினாலும் அன்பினாலும் அவருக்கு நாமும் ஏன் ஒரு வாழ்த்துச் செய்தியை எழுதக் கூடாது என்று மனம் எம்மை ஏவிக் கொண்டிருந்தது.

ஐயா அவர்கள் தமிழுக்கும் தமிழ் மக்களுக்குமல்லாமல் ஏனைய சமுதாயமும் வாழவேண்டிப் பாடுபட்ட ஓர் உத்தமர். நாம் மட்டுமல்ல ஏனைய சமூகமும் அறிந்த உண்மை அது. ஐக்கிய நாடுகள் சபைக்கு துணிச்சலுடன் சென்ற தமிழன் வைகுந்தவாசன் என்ற பெயரைக் கேள்விப்பட்டதே அன்றி அவரை இலண்டன் மாநகரம் வந்து தான் நேரில் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

நாம் இலண்டனில் இந்த சுற்றாடலில் வீடு பார்க்கும் பொழுது, தற்செயலாக வீதியில் சந்தித்து தானும் இவ் வீதியில் இருப்பதாகவும், வீடு வாங்கும்படியும் எங்களை ஊக்கப்படுத்தினார். எங்கள் குடும்பமும் அவர் குடும்பமும் இன்றுவரை இணைபிரியாது வாழ்ந்து வருகின்றோம். அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

அன்புடன்
கனகரட்னம் குடும்பம்.

---

**Chuderoli Publication Society (UK)**

**சுடரொளி வெளியீட்டுக் கழகம்**

15 Rutland Road, Forest Gate, London E7 8PQ. Tel: 020 8552 6992. Mobile: 07956 657 852

### வள்ளுவன் வழி வாழ்ந்த வைகுந்தவாசன் வாழ்க



தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர் பெரியார் வைகுந்தவாசன். தன் கல்வியால், அறிவால், ஆற்றலால்,வைராக்கியத்தால்,திடமான கொள்கையால்,எழுத்தால்,பேச்சால், செயலால், வாழ்க்கையில் சாதனைகள் பல புரிந்தவர்.தமிழன் பெருமையை உலக அரங்கில் நிலைநாட்டியவர்.தமிழர் பாரம்பரியத்தைப் பண்பாட்டை,சமய உணர்வை பேணிவந்தவர். அவர் இல்லத்தினுள் நுழைந்தால் இவற்றை உறுதிசெய்யும் சான்றுகளைக்காணவாம். இவரது ஐம்பது ஆண்டு பணிகள் வரலாறுகளாக பதியப்பட்டுள்ளன. வள்ளுவர் வாசுகிபோல் வாழ்க்கைத்துணைவியுடன் வளமாக வாழ்க்கை நடத்திவருபவர். சமுதாய உயர்வுக்காக தன் உழைப்பால் ஆக்கப் பணிபுரிந்தவர். இவரது தூய உள்ளம், உயரிய நோக்கம், கண்ணியம், கட்டுப்பாடு, எளிமையான வாழ்க்கை நெறிகள் என்பன எண்பது வயதிலும் இளமைப் பொலிவுடன் வாழ வழி வகுத்தது. கணவனின் வாழ்க்கையின் வெற்றிக்கு துணையாகவிருந்து பணிபுரிந்துவரும் வாழ்க்கைத் துணைவி திருமதி மகேஸ்வரி வைகுந்தவாசன் தமிழ்ப் பெண் உலகின் ஒரு ஒளிவிளக்கெனலாம். இருவரும் மேலும் பல்லாண்டு வாழ்ந்து தமிழினத்திற்கு நற்பணிகள் ஆற்ற ஆண்டவன் அருள்கிடைக்க வேண்டுமென சுடரொளிக் கழகத்தின்சார்பில் வேண்டுகிறோம்.: பிரர்த்திக்கின்றோம்.

திருமதி செல்வதி சம்பந்தன் B.A.(Hon);
நிருவாக இயக்குனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புடையவர், பண்புடையவர், அறிவுடையவர், ஆற்றலுடையவர்

இவரது ஐ.நா. பேச்சு இலங்கை அரசாங்கத்தை அதிர வைத்தது. நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை - என்பது முதுமொழி. இன்று உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால் நல்லவர்கள் இன்னும் வாழ்கிறார்கள் என்பது அர்த்தமாகும். அவ்வாறான ஒருநல்லவர் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திரு. வைகுந்தவாசன் என்றால் அது மிகையாகாது. வைகுந்தத்தில் வீற்றிருக்கும் வைகுந்தன் மக்களைக் காப்பாற்றி ரட்ஷிக்கிறார். பூவுலகில் வாழும் வைகுந்தவாசன் தமிழ்மொழி, தமிழினம், தமிழர் சுதந்திரம் என்பனவற்றைக் காப்பாற்றி வருகிறார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழ்த்தந்தை செல்வாவுடன் போட்டியிட்ட காலத்திலிருந்து இவரதுபெயரை மட்டுமே அறிந்திருந்தேன். லண்டனுக்கு அவர் வந்த பின்பு அவருடன் தொடர்பு நேரடியாக இருந்தது. அவர் வந்த பின்பு அவரது சேவை விரிவாகத் தொடங்கியது. திறமை வாய்ந்த சட்டத்தரணியாக வாழத் தொடங்கிய இவர் பின்பு தமிழினத்தின் சுதந்திரத்திற்கெனப் போராடும் ஒருவராகத் தன்னை மாற்றி அதற்குரிய முயற்சிகளில் செயற்படத் தொடங்கினார். பலரும் பலவாறு உதவிய போதும் இவரது மனைவி இவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 55 வருடங்களுக்கு மேலாக மனைவியாக வாழ்ந்து வரும் துணைவியார், இவரின் ஒரு அந்தரங்க செயலாளராகவே கடமையாற்றினார்.

1995ல் இலண்டன் சிவன் கோயிலில் அமைந்த நாவலர் மண்டபத்திறப்பு விழாவின்போது நாவலர் பற்றி அவர் ஆற்றிய சொற்பொழிவு ஒரு உற்சாகமான பேச்சாக அமைந்தது. உலகளாவிய மக்கள் எல்லோருடனும் பழக்கம் இவருக்கு ஏற்பட்டிருந்த போலும் பல சிங்களத்தலைவர்களிடையே இவருக்கு செல்வாக்கு இருந்தது.

பொதுவுடைமைவாதியான இவர் தமிழ் மொழி மீது மட்டுமன்றி இந்து சமயத்தின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். இது சம்பந்தமாக இவர் எழுதிய நூல்கள் இவரது மதப்பற்றினை எடுத்துரைக்கின்றன. ஸ்ரீரமணமகரிஷியின் தொடர்பும் அவரது தரிசனமும் இவருக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

எல்லாச்சிறப்பும் மிக்க பழுத்த தமிழ் அறிஞரான இவரது 80வது பிறந்த நாள் கொண்டாடப்படவிருப்பதையிட்டு மிக்க மகிழ்வடைகிறேன்.

இலண்டன் சிவன் மீது இவருக்கு அந்தரங்கமான பக்தி இருந்ததை நாம் அறிவோம். ஆலய வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்ட இவர் அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆலய நலனில் அக்கறை காட்டினார்.

அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் மிக்க இவர் மேலும் பன்னெடுங்காலம் மனைவி மக்கள் சுற்றத்தாருடன் வாழ வேண்டும் என உண்ணாமலை உடனுறை அண்ணாமலைப் பெருமாளை பிரார்த்தித்து வணங்கி எமது மகிழ்வையும், அன்பையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்.


ந. சச்சிதானந்தன்.

பிரித்தானிய சைவத்திருக் கோவில்கள் ஒன்றிய செயலாளர்

01.03.98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழிய வைகுந்தவாசன்!

உணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலன்
பொதுச் செயலாளர், நாம் தமிழர் இயக்கம்

உவமையிலாத் தமிழே!
உலவும் நிலாத் தமிழே!
வைகுந்த வாசனே!
வாழிய வாழியவே!

மலராய் மணப்பவனே!
மணியாய் ஒளிர்ப்பவனே!
இலண்டனில் உறைபவனே!
ஈழம் நிறைந்தவனே!

வணங்க மறுப்பவனே!
வளையம் தனை மீறி
ஐ.நா. மன்றத்தில்
அரிமா எனப் பாய்ந்தே

ஈழவர் துயரமதை
எடுத்தே உரைத்தவனே!
எண்பதாம் அகவையிலும்
எறும்பாய் உழைப்பவனே!

தமிழாய்ப் பூத்தவனே!
தமிழைக் காப்பவனே!
அமிழ்தாய் தமிழ் பேசி
அன்பால் ஈர்ப்பவனே!

விழித்தலை விரும்பாது
வீழ்ந்தோர் எழும்புதற்கே
வழித்துறை வகுப்பவனே!
வரிப்புலி நிகர்த்தவனே!

கோழையாய் வாழாது
கொள்கையில் நிற்பவனே!
வாழையாய்த் தழைத்தே நீ
வாழிய பல்லாண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக்கள்

## துணிவே துணையானவர்

ஸி. சிறீபதி

பலரும் பல சாதனைகளைச் செய்கிறார்கள். ஆனால் திரு வைகுந்தவாசன் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபைக்குள் புகுந்து சில நிமிடங்களுக்குள்ளாக எமதுஇனத்தைப் பற்றியும், எமது சொந்தப் பூமியைப்பற்றியும் உலகம் அறிய வைத்தது ஒரு இமயச்சாதனை தான். இதைவிட எங்கள் பிரச்சினைகளை எல்லாம் நாட்டுக்கு நாடு சென்று உலகத் தலைவர்களுக்கு எடுத்தரைத்து வந்தமையும் அவரது பணியின் சிறப்பாகும்.

துணிவே துணை என்பது இவரது வேதவாக்கு. அதன் பலன்தான் இவரது சாதனைகள். முத்துவிழாக்காணும் இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

22, கவடிஷ் றோட், நியூமோல்டன்.

## பெரியார் பெருமை

கெ. பாஸ்கரநாதன்

உலகநாடுகளின் தனிப்பெரும் ஸ்தாபனமான ஐக்கிய நாடுகள் சபையில் ஈழத் தமிழர்களுடைய பிரச்சனைகளை முன்வைப்போம், வைக்கச் செய்வோம் என்று ஆண்டாண்டு காலமாக நாம் குமுறிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் இன்றுவரை அதைச்செய்ததாக இல்லை.

சொல்லாமல் செய்வார் பெரியார் என்பதற்கமைய ஒருவர் செய்வாரானால் அவர்தான் உண்மையிலேயே பெரியார் ஆவார். இந்தப் பெருமை விழாக்காணும் வைகுந்தவாசன் ஐயா அவர்களையே சாரும். முத்தான முத்துவிழாக்காணும் அன்னாருக்கு எமது வாழ்த்துக்கள்.

*11, விக்ரா குரொவ், வெம்ப்ளி.*

## இளைஞர்கள் பின்பற்றட்டும்

க. ஜெகநாதன்

ஒரு செயல் வீரருக்கு விழா எடுப்பது மகிழ்ச்சி தருகிறது. எவர் கௌரவிக்கப்படவேண்டுமோ அவரை உபசரித்துக் கௌரவிப்பது தமிழ் மக்களுடைய பாரம்பரியம். அதற்கமைய திரு. வைகுந்தவாசன் அவர்களுக்கு முத்துவிழாக் கொண்டாடப் படுவது சாலப் பொருத்தமாகும். இவரைப்பின்பற்றி எமது இன்றைய இளைஞர்கள் தமிழ் மக்களுக்காகவும், தமிழ் ஈழத்துக்காகவும் பல சாதனைகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும்.

ஈழத்தமிழ் மக்கள் இன்று ஒரு கஷ்டமான சூழ்நிலையில் தேசம்விட்டுத் தேசம் சென்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைமாற்றி தமிழ் மக்களுக்கு சொந்த நாட்டை உருவாக்கிக் கொடுக்க ஒரு வைகுந்தவாசன் மட்டும் போதாது இன்னும் பல வைகுந்தவாசன்கள், திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன் அடிச்சுவட்டில் உருவாக்வேண்டும் என்பதே எமது ஆசையாகும்.

309 ஹேய்டன்ஸ் றோட், விம்பிள்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுந்த மண்டபம்

ஆன்மீகம்

அன்புமார்க்கம்

அரசியல்

பொருளாதாரம்

சுதந்திரதாகம் –

இன்னும் பல

தத்துவங்களைப்

போதிக்கும்

வைகுந்த மண்டபம்



*பொன் பாலசுந்தரம்*

## லண்டனில். . . . . . . .

உண்மையிலேயே லண்டனில் தான் !

நான் பார்த்து, சிந்தித்து, ரசித்து, மகிழ்ச்சி அடைந்தது மட்டுமல்ல, பெருமைப்பட்டதையே எழுதுகிறேன்.

பாராட்டுக்குரிய ஒரு பெரியவர் வீட்டு மண்டபம். அங்கே. . . .

தமிழும், சைவமும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் நெற்றியில் திருநீற்றுக்குறியும், மார்பு நிறைய உருத்திராட்சமும் அணிந்தபடி வீற்றிருக்கிறார்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அவர் போர்க்கொடி பிடித்த அந்தக் காலத்திலுள்ள மிடுக்கான தோற்றத்துடன் இன்றைய தமிழர்களின் உணர்ச்சி நரம்புகளை உரப்படுத்தும் பார்வை எல்லோரையும் கவர்கிறது.

சைவ ஆலயங்களின் பிரகாரங்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய திருஉருவங்கள் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். இவர்களுடைய வரலாறுகள் சுவையானவை. இவைகளில் வேகம் இருக்கும். அடக்கம் இருக்கும். ஆழ்ந்த கருத்திருக்கும். ஆத்மார்த்தமான பயனும் இருக்கும். சேக்கிழாரின் பெரிய புராணம் என்ற காவியத்தின் சிறப்புக்குரியவர்கள்.

இந்த சிறப்புப் பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்களும் பட்டுப்பீதாம்பரமணிந்து வரிசை வரிசையாக நிற்கிறார்கள். இன்றும் சைவம் வளர்ந்து வாழ்ந்து வருவதற்கு முன்னின்றவர்கள் இவர்கள். வாழ்க்கைக்கு சமயம் அவசியம் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**'எல்லாம் முடிந்த முடிவு' 'யாம் ஒன்றும் அறியோம்' 'எல்லாம் உண்மை'** என்ற தாரக மந்திரத்தை மனித ஈடேற்றத்துக்காகப் போதித்த ஈழத்துப் பெருங்கருணைப் பேராறு - ஈழத்து மாமுனிவர் யோகர் சுவாமி அவர்கள் தூய வெண் வேஷ்டியுடன் எல்லோரும் நல்லபடி வாழ வேண்டும் என அமர்ந்திருந்து ஞானோபதேசம் செய்கிறார்.

ஈழம் வாழ் தமிழ் மக்களின் அரசியல் முன்னோடி சேர். பொன் இராமநாதன்- வெள்ளைக்கார- ஏகாதிபத்தியம் குடி கொண்டு அன்னிய மோகம் திணிக்கப்பட்டு எல்லோரும் அதற்குள் அடைக்கலம் கோரிய காலம்.

ஆனால் தமிழர்கள் தனித்துவமுடையவர்கள், பாரம்பரியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள், சமய உணர்வுடையவர்கள் என்பதை நிலை நிறுத்த தயங்காத தமிழ் மகன் இவர்.

நிமிர்ந்த நிலை. தலைப்பாகை. முளங்கால் வரை நீண்ட முதலியார் கோர்ட், உத்தரியச் சால்வை இவற்றுடன் நெற்றியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனப்பொட்டு - இப்படிக் கம்பீரமாக காட்சி தருகிறார்.

இவர்களைப் பார்த்ததும் மனம் ஈழ நாட்டுக்கே அழைத்துச் சென்று விடுகிறது.

நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் ஈழத்துக்கு குரல் கொடுத்த இந்திராகாந்தி அவர்கள் இனி "இந்தியா என்ன செய்ய வேண்டும்" என்று கேட்பது போன்ற பார்வையுடன் நிற்பது மனதைத் தொடுகிறது.

வறுமைக்கோட்டுக்குள் வாடி வதங்கி சின்னாபின்னப்பட்டிருந்த சீன மக்களுக்குத் திடீர் புரட்சியின் மூலம் வாழ்வளித்து சீன நாட்டை நவசீன நாடாக மலரச் செய்த பெருமைக்குரிய மாசேதுங் தமது இளவயதுத் தோற்றத்துடன் "இன்று சீனா என்ன செய்கிறதென்று" கேட்பது போல் நிற்கிறார்.

சோவியத் யூனியன் மீது இரும்புத்திரை போட்டு அதற்குள் மக்களை அணி திரட்டி உலக நாடுகளை கலங்க வைத்த ஸ்டாலின் மீசை துடிக்க மிடுக்காக நிற்பதையும் பார்க்கலாம்.

இவர்கள் மட்டுமல்ல. உங்களில் பலருக்கு கார்ள் மார்க்ஸ், ஏஞ்செல்ஸ் போன்றோரைத் தெரிந்திருக்கும்.



கம்யூனிஸ் தத்துவத்தை ஒன்றுதிரட்டி ஒரு சித்தாந்தமாக ஓரே கோப்பையில் உலக நாடுகளின் வாழ்க்கை மந்திரமாக இருக்கட்டும் என்று திரட்டிக் கொடுத்த பெருமைக்குரியவர் தான் கார்ள் மார்க்ஸ். இவர்கள் ஒன்றாகச் செயல்பட்டு வந்தவர்கள். உலகப் பிரசித்தி பெற்ற தாஸ் கப்பிற்றல் என்ற உலக பணப் பொருளாதார முறையை வரையறை செய்து கொடுத்த பெருமை இவர்களையே சார்ந்தது.

கம்யூனிஸ சித்தாந்தத்தின் பிதாவான கார்ள் மார்க்ஸ் ஒரு ஜெர்மானியர்.

இவர்கள் - கார்ள் மார்க்சையும், ஏஞ்செல்ஸையும் இங்கு சந்திக்கலாம்.

தனி மனிதனது அபிலாசைகளை நிறைவேற்ற, வாழ்க்கையில் முன்னேற, சாதனைகள் படைக்க, கல்வியில் தேற, மேதைகளாக, அரசியலிலோ அல்லது ஆத்மீகவாதிகளாக மலரவோ, ஆக்க சக்திகளுக்கு ஊக்கமளிப்பவர்களாகத் தம்மைத் தயார் செய்யவோ - இப்படி எல்லாவற்றிற்கும் மனதைத் தயார்படுத்திக் கொள்ள உந்து சக்திகள் தேவை. அதன் பிரதிபிம்பமே இந்த மண்டப காட்சிகள்.

லண்டனில் இப்படி ஒரு மண்டபம் இல்லையே என்று பலர் கேள்வி எழுப்பக்கூடும். நான் நேரில் பார்த்து பரவசப்பட்டதையே எழுதியுள்ளேன். எல்லாம் உண்மை.

ஒரு சிறிய வீட்டின் மனம் நிறைந்த மண்டபம்.

ஆன்மீகம், அன்புமார்க்கம், அரசியல், சுதந்திரதாகம், பொருளாதாரம் உட்பட இன்னும் பல வாழ்க்கைத் தத்துவங்களைப் போதிக்கும் இந்த வீடு . . . . .? வீட்டில் இருப்பவர். . . . ?

ஆற்றல் படைத்தவர். போற்றுதற்கு உரியவர். சாதனை வீரர். வேதனைகளைப் பொருட்படுத்தாதவர். இலட்சியத்தை அலட்சியம் செய்யாதவர்.

பேச்சை விடுத்து செயலுக்கு மதிப்பளிப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் உள்ளக்கிடக்கையின் பிரதிபலிப்புத்தான் மண்டபத்தில் காணப்படுபவை.

இப்போது உங்களுக்கு இவர் யார்? என்பது புரிந்திருக்கும்.

எவராலும் சாதிக்க முடியாத அந்த ஈழக்கோரிக்கையை உலக நாடுகளின் ஆதி மூலம் என்று மதிக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பித்துப் பேசிய கிருஷ்ணா வைகுந்தவாசன் வீட்டின் மண்டபம் தான் அது. லண்டன் கொலியேஸ் வூட் வாறன் தெருவிலுள்ள மனம் நிறைந்த இல்லம்.

185 நாடுகள் பிரதிநிதித்துவம் வகிக்கும் இந்த மேன்மை தங்கிய சபையில் தமிழ் ஈழ மக்களைப் போன்ற அடக்கி ஆளப்படும் ஒரு இனம் தனது குறைபாட்டைச் சொல்ல முடியாமல் இருந்தால் வேறு எங்கு தான் நாம் நமது குறைகளைச் சொல்ல முடியும்" என்று குரல் எழுப்பினாரே! அதே வைகுந்தவாசனின் இல்லமேதான்.

இவர் இலங்கையில் தொழிற்சங்கவாதியாக பொதுத் துறையில் இறங்கியவர். இதில் இலங்கை அரசின் அடக்குமுறை அராஜகத்தை பகிரங்கமாக கண்டித்து அரசு பதவியை இழந்தவர்.

பின்னர், வழக்கறிஞராக, அரசியல்வாதியாக, நீதிபதியாக உயர்ந்து, ஐ. நா. வரை சென்ற பெருமைக்குரியவர்.

ஐ. நாவில் இவர்- திரு. வைகுந்தவாசன் தமிழ் ஈழம் வாழ் மக்கள் பற்றிப் பேசிய சம்பவம் உலக நாடுகளையே விழிப்படையச் செய்து விட்டதெனலாம். தமிழ் ஈழம் எங்கே இருக்கிறது? ஈழத்தமிழர்கள் யார்? என்றெல்லாம் ஆராய வழி வகுத்ததும் இவரது ஐ. நா. பேச்சுத்தான்.

இவர் ஒரு சாதனை வீரர் என்று நான் கூறுவதற்கு இச்சம்பவம் ஒன்றே போதும் என்று நினைக்கிறேன். அந்த மண்டபத்துக்குள் ஒரு வீணை இசையில் மனதை உருக வைக்காமல் இருக்க முடியுமா? அதற்கும் அர்த்தமுண்டு. வீணையும், நாதமும் போல வைகுந்தவாசனும் அவரது மனைவி மகேஸ்வரியும் இணை பிரியாதவர்கள் என்பதை அந்த வீணை மீட்டுக்கொண்டிருக்கிறது.

மலரில் திரு. வைகுந்தவாசன் அவர்களைப் பற்றி பல நண்பர்களும், அன்பர்களும் எழுத இருப்பதால் இத்துடன் நான் முடித்துக் கொள்கிறேன்.

---

## வாழ்த்துப்பா

பொள்ளாச்சி மணிமொழி

ஆண்டெண்ப தன் நிறைவை வைகுந்த வாசக
தூண்டார்வம் நட்பைச் சுடரொளியாய்க் காட்டுமாறு
காண்க தமிழர்பொற் காலமென்ற நற்கனவாய்
வேண்டினை வாழ்க வாழ்கவே
ஈத்துவக்கும் இன்பத்தைச் சேர்த்துவக்கும் இன்பத்தால்
ஊற்றுவக்கும் இன்பம்போல் நோற்றுவந்தாய் வாழ்க வாழ்க
வைகுந்த வாசகனே வாழ்க வைகுமுன்னில்
வைகும் தம் வாழ்வா சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Marco Polo's Visit to Medieval Eelam

by
Sachi Sri Kantha
(Associate Professor, Gifu University, Japan)

**Introduction**

It is with humility that I express my sincere greetings to Mr. Krishna Vaikunthavasan for adding another ten worthy years after reading the biblical span of 'three score and ten'. It is also somewhat unfortunate that only once I have had the chance to meet him in person, and that too for a fleeting moment at Madurai, during the 5th International Tamil Research Conference held in January 1981. However, I have had the pleasure to communicate with him via letters occasionally during the past 15 years.

Among the Eelam Tamils, other than 'Adangaa Thamizhan' Chellappah Suntheralingam, I cannot think of any other individuals like vaikunthavasan Aiyah who expressed his rugged individualism in so many different areas for the Tamil cause. In some distinction than that of Suntheralingam: But one should not fall into the trap of comparing apples and oranges. Thus, I will limit my canvas to what I have been commissioned.

If I'm not mistaken, history records that Vaikunthavasan is probably the first Eelam Tamil to visit China in a quasi-official delegation, after the 1949 People Revolution commanded by Chairman Mao Ze Dong. To honour his long record of public service, in this essay, I wish to review a lesser-known and neglected aspect of 13th century history of Eelam, chronicled by a world renowned individual, who was a predecessor to Vaikunthavasan in setting his foot in China. This guy is none other than Marco Polo, whose rugged individualism influenced many subsequent historical events in many nations.

**PROF. INDRAPALA'S THESIS.**

One of the controversial theories regarding the early Tamil settlements in Ceylon was proposed by Prof. K. Indrapala in his Ph.D. dissertation submitted to the University of London in 1966. His dissertation was entitled. "Dravidian Settlements in Ceylon and the Beginning of the Kingdom of Jaffna". A published version of this thesis appeared in the Journal of Royal Asiatic Society (Ceylon) in 1969. From his study of available epigraphic evidence, Indrapala had arrived at a controversial inference that permanent Eelam Tamil settlement in the northern Ceylon originated only in the mid 13th century. I quote in full the last paragraph of his published paper.

"The settlements of the thirteenth century, therefore, mark the most important stage in the course of the early Tamil settlements in Ceylon. In the period prior to the middle of the 13th century, mercenary and mercantile communities played an important part in the establishment of Tamil settlements. It is only after the middle of the thirteenth century that we get evidence of Tamils migrating to the Island with the definite aim of settlement. With this stage, the northernmost region and the eastern districts emerged as a predominantly Tamil area with all the attendant political problems".

Well, for the past three decades, Indrapala's thesis has gained a notoriety of its own. Sinhalese politicians, journalists and pseudo-historians had flaunted this piece of academic embroidery to dispute the ancestral claims of Eelam Tamils. Indrapala is undoubtedly a scholar with good credentials. But, my question is, does this mean that he cannot be wrong?

Recently, I had the chance to read completely what Indrapala had written in 1969. He had begun the second paragraph of his paper by stating; "As in the case of all students of ancient history we are confronted in the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

first place with the problems of inadequate sources". This is a true grievance, one should accept in good faith. But what will one think of a scholar, who bothers not to check on an authentic and original source as reputable as Marco Polo, before arriving at a half-baked inference?

**MARCO POLO'S VISIT TO EELAM**

Marco Polo (1254-1324), the medieval chronicler of the Orient, had visited the northern Ceylon in the last decade of the 13th century, on his return from China. In his classic work, 'Divestment dou Monde' (Description of the World), he had commented about the inhabitants of Eelam. But Indrapala makes no mention about Marco Polo's visit in his controversial paper. I will let the Venetian master chronicler to describe what he saw in the last decade of the 13th century Eelam and its environs.

Says Marco, "On leaving the island of Andaman and sailing for 1,000 miles a little south of west, you come to the island of Seilan, which is undoubtedly the finest island of its size in all the world. Let me explain now. It has a circumference of some 2,400 miles (actual figure now is 700 miles. And I assure you that it used tobe bigger than this. For it was once as much as 3,500 miles as appears in the mariner's charts of this sea. But the north wind blows so strongly in these parts that it has submerged a great part of this island under the sea. That is why it is no longer as big as it used to be. (An asterisk note by an early translator of the text says, The northern side of the island is so low-lying that a voyager coming from this quarter does not see it till he is right on it.)

Marco Polo continues, "Now I will tell you something about the island. It is ruled by a king called Senemain (probably a corruption of the Tamil word "Sandamann". The people are idolaters (referring to the Hindus, who are idol-worshippers). They pay no tribute to anyone (viz,. They were a free nation). They have no grain other than rice. They have sesame, from which they make oil. They live on milk, flesh and rice and have wine made from trees (which is none other than kallu from pallmyra palm). And they have brazil wood, the best in the world".

The sentences of Marco Polo which disprove Indrapala's thesis seems uncomplimentary to Eelam Tamils. In first reading. He has noted.

"The people of Seilan are no soldiers, but poor cowardly creatures. And when they have need of soldiers they get Saracen troops from foreign parts".

What one should note is, that Marco Polo's original script was written in a popular mixture of medieval spoken Italic French language. That was the language used by romance writers of the area. As such, nuances of some words and phrases used by Marco Polo and Rustichello, the scribe of Marco's text ( see below about this individual) would have become twisted when this medieval dialect of French was translated into English for the first time in 1579 by J. Frampton, which in turn was based on a Spanish translation of a very corrupt Venetian version. Thus, one need not feel offended by the description of Marco Polo of medieval Eelam Tamils as "poor cowardly creatures". On the contrary, his mention of medieval Tamils he saw in Eelam as "no soldiers" should be interpreted as describing the social milieu in which they were living; viz, peaceful atmosphere and thus an absence of necessity for them to engage in armed conflict. Marco Polo's mention about Saracens (Muslims) as mercenaries reiterates this point, and around that time Muslims were beginning to settle in northern Ceylon, and not Tamils as proposed by Indrapala.

**MARCO POLO VERSUS INDRAPALA**

Let me reiterate how Marco Polo's real description differs what Indrapala has visualised. First, while Indrapala of the 20 century holds the view what after the middle of the 13th century "we get evidence of Tamils migrating to the Island with the definite aim of settlement". Marco Polo who visited Eelam at that time has not mentioned about any such migratory activity in the region. Secondly, whereas Indrapala



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

came to a conclusion that, Eelam Tamils in the northern Ceylon prior to the mid 13th century consisted mostly of mercenary and mercantile elements, Marco Polo presents a completely different picture where, the population was not engaged in warfare, and that "they pay no tribute to anyone".

This shows that the Tamil population in Eelam at that time, rather than being transient and migratory, had established civic stability. The only mercenary elements which Marco Polo has described in his travelogue were the Muslims. This in turn could only demonstrate that the time frame suggested by Indrapala for the early Tamil settlements in Ceylon is very much in error, and has to be ante-dated.

## PROF. KINGSLEY DE SILVA'S TREATMENT OF MARCO POLO

Not only Indrapala, but even other erudite Sri Lankan historians like Kingsley M de Silva have failed to study and interpret in detail, the importance of Marco Polo's record of his visit to the "Seilan" around the year AD 1290. De Silva in his text book, "A History of Sri Lanka" (1981) makes no reference to Marco Polo. In this book, de Silva has observed that "the compilation of a reasonably accurate chronological list of the rulers of Jaffna kingdom enormous difficulties". and begins the time frame of Jaffna dynasty from that of Pararajasekaram (1478-1519).

De Silva's hesitation to identify the king whom Marco Polo clearly mentions as "Sendemain" who pays" no tribute to anyone" is also worthy of taking note here. One can surmise from corroborative sources that Marco Polo's visit to Ceylon would have taken place during the reign of Parakrama Bahu III, who ruled at Polonnaruwa between 1287 and 1293, according to de Silva.

## HISTORICAL EVENTS RELATED TO MARCO POLO'S VISIT TO EELAM

Richard Humble in his book, Marco Polo (1974) has observed that Marco Polo would have visited Ceylon at least three times, the last one on his return journey which began probably around 1289. Marco Polo was not a lone traveller to Ceylon. He, his father (Niccolo Polo) and uncle (Maffeo Polo) were returning to Venice from China, after a 20 year stay. They were accompanying a 17 year old princess Kokachin, who was to wed Kubilar Khan's great nephew (who was ruling Ilkhan of Persia - present Iran). Kubilai Khan sent the party in a fleet of 14 ships, 600 men and 100 ladies-in-waiting, which included another "daughter of the king Manzi". It took this party three months to reach Malacca region, where the natives were hostile. In the ensuing conflict with the natives, a significant number of men in the party lost their lives.

Thus, when Marco Polo described the Eelam Tamils as "no soldiers", that should be taken as a compliment, since he did not encounter any hostility in the land of Eelam, contrary to what he experienced in the Malacca region. When the entire party reached the Persian Gulf around the year 1291, the record shows that 582 men and one lady-in-waiting had died, with only 12 men remaining in the party which left China. The exact date of the return of Marco Polo in Venice has not been identified properly. Some researchers think that 1292 could be the year, but others settle for the year 1295.

## ROLE OF WAR IN THE GENESIS OF MARCO POLO'S TEXT

How Marco Polo's travelogue came to be written has also an interesting story behind it. Wars everywhere cause many losses to lives, limbs and property. But, the world should thank the Battle of Curzola for giving birth to Marco Polo's inimitable classic. Marco Polo, while serving as a 'gentleman commander' of a Venetian galley was captured by the enemy (Genoese) forces in a sea battle on 6 September 1298. While in Genoa prison, he was befriended by one of his cell mates, Rustichello of Pisa, a romance writer of some repute. During the prison term, Marco Polo dictated his travels to the Orient, for Rustichello to scribe. By the time, when both were released under the terms of a peace treaty signed on 25 May 1299, the partnership of the merchant adventurer and the professional romance writer had produced a world best seller (for almost seven centuries!), which is still useful to demolish the fancy hypotheses generated by the contemporary historians of Sri Lanka.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போராட்டென்பதுன் குருதியில் உறைவது!"

எஸ்கின் வன்மையும் நெட்டியின் மென்மையும்,
அல்கா அறிவும் அளவாய் அமைந்த
வய்குந்த வாசன் என்னும் தமிழ்ப் பெரியோய்!
எய்தினை எண்பது என்பதைக் கேட்டு
எய்தினம் மகிழ்வு அடைந்தனம் பெருமை
வாழிய வல்லோய்! வாழிய நல்லோய்!

சூழ்க நல்லன! ஆழ்க தீயன!
ஊழி தோறூழி உவந்து நீ வாழி!
தோழிநின் மனையொடு சிறந்து நீ வாழி!
ஈழமென் றொன்று எமக்கு நன்றென்று
ஆழமாய் அன்றே அறைந்தவன் நீயலோ!

சிங்களச் சிறிசுகள் தமிழருக் கிழைத்திடும்
இம்மிசைத் தீமையை உலகினுக் குரைத்திட
நம்மவர் யாருமே முயன்றிடா வேளையில்
கம் மென ஐநா மன்றிடைப் புகுந்து
பம்பரம் என்ன மேடையில் பாய்ந்து
நம் தமிழ் மக்களின் நலிவுறு நிலையினை
இம் மெனச் சொல்லி உயர்ந்தவன் நீயலோ!

பதிற் றெட்டாண்டுப் படியில் ஏறியும்
பதற்றம் காட்டா பலம் சேர் பெரியோய்!
சோராய் செயலா! சிந்தனையாளா!
ஆறா உரையோய்! அயரா உழைப்போய்!
எண்பது வயதினை எட்டினை யென்று
எண்ணிய போதுன் பழ நினை வெல்லாம்
பட்டன கண்ணில், படமாய் வந்த் நீ
எட்டிய ஏணிப் படிகளும் தெரிந்தன
வழக்குரையன் நீ என்பதை அறிவர்,
புழங்க நல்லவன் என்பதும் அறிவர்,
பழங்கதை பேசிப் பயனில செயாது
உளநிலை தெரிந்து உவப்பன செய்யும்
களச் செயல் வீரன் நீயென்பதறிவரோ?
போராட் டென்பதுன் குருதியில் உறைவது
போராட்டின்றேல் நீயும் நீயலை!
மெல்லத் தொடங்கி மேல் மேல் வளர்ந்து
கல்வியில் உயர்ந்து கனிந்தவன் நீயலோ!
பேச்சும் எழுத்தும் உன் மூச்சாய் நின்றன
ஏச்சும் இனியவும் உனக்குரமாயின
காச்சாய் காய் பழுத்தாய் கனிமரமானாய்
தோய்ச்சாய் நம்மில் படிமா செல்லாம்
அய்யா நும்மை எங்கனம் வாழ்த்துவன்?
அய்யா உங்களை யாங்கனம் வழுத்துவன்?
துய்யா நின்னைப் போற்றிட நான் யார்?
நோயற நொடியற மகிழ்வாய் இருந்து
தாயவள் ஈழம் தனிக்கொடி பெற்று
தேயத் தோர்கள் ஒப்புதல் பெறும் வரை
தேகத்தோடு நீவீர் வாழ,
மேக நிறத்தன் மலரடி பணிவேன். ■

**வழக்கறிஞர்**
**செல்லத்தம்பி சிறிக்கந்தராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

ஆலய நிர்வாக வேலைகளுக்கிடையிலும் சிரமம் பாராமல் இவ் விழாவைச் சிறப்பிக்க ஆலோசனை கூறி ஒத்துழைத்த றூற்றிங் அருள்மிகு அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு.நா.சிவரெத்தினம் அவர்கட்கு

மலர் வடிவமைப்பைச் சிறப்பாகச் செய்து தந்த " தமிழ் ஓலைகள்"
ஆ. ஞானேந்திரனுக்கு

கணனி ஆக்கம் செய்து உதவிய வேலணையூர் சிவா, திருமதி.சரோஜா இலட்சுமணன், மாணிக்கவாசகர் திவாகரன் ஆகியோருக்கு,

முத்துவிழாச் செய்திகளை ஒலிபரப்பி உதவிய ஒலிபரப்பு நிலையங்களான சன்றைஸ், ஐ.பி.ஸி, ஸ்பெக்ரம் மற்றும் செய்தி வெளியீட்டு ஆதரவு தந்த புதினம், நம்நாடு, ஈழமுரசு, ஈழநாடு, அஞ்சல் பத்திரிகைகளுக்கு

கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றிச் சிறப்பித்த கலைஞர்களுக்கு

மலருக்கு புகைப்படங்கள் எடுத்து தந்து உதவிய ஜோர்ஜ்க்கு

மலரைச் சிறப்பாகவும், உரிய காலத்திலும் வெளியீடுவதற்கு உதவிய வாசன் அச்சக உரிமையாளருக்கு

விழாவைச் சிறப்புற நடாத்த எமக்கு ஆதரவு தந்த அன்புள்ளங்களுக்கு

எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள்
ஜனாதிபதி
திரு.ஏ.ஆர்.
வெங்கட்ராமனுடன்



பிரதம நீதியரசர்
டென்னிங்குடன் ..




சீன விஜயத்தின் போது..



சாம்பியா நீதிபதிப்பதவியின் முதலாவது
ஆசியநாட்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியுடன்......



மக்மிலன் பிரபுவுடன் .......



பரிசுத்த பாப்பரசருடன் ....



தற்போதைய
இந்தியப்
பிரதமர்
வாஜ்பாயுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org